வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු





மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433
076 284 4443

MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



Email : news@eelanadu.lk | மலர் : 04 | 18.04.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 130 | பக்கங்கள் : 16


தமிழர் விரோத செயல்களுக்கு எதிராக

# வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் வரும் 25ஆம் திகதி கடையடைப்பு

**பாராளுமன்றத்திலும் போராட்டம்**

**முஸ்லிம், மலையக கட்சிகளும் ஆதரவு**

**ஐக்கிய மக்கள் சக்தியும் ஆதரவளிக்கிறது**

யாழ்ப்பாணம், ஏப். 18

வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பு, தொல்பொருள் சின்னங்கள், மரபுரிமைகள் அழிப்பு, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 25ஆம் திகதி வடக்கு, கிழக்கு தழுவிய கதவடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், இலங்கை தமிழரசு கட்சியின் தலைவரும் யாழ்ப்பாணத்தில் கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக இந்தக் கூட்டத்தை ஒருங்கிணைத்தவரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பேச்சாளருமான கு. சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் கடையடைப்பு போராட்டம் நடைபெறும் அதே தினத்தில் அன்றைய தினம் பாராளுமன்றத்திலும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பைப் பதிவு செய்வர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, நேற்றைய தினம்

15

## சைவ கோவில்களை அழிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும்!

சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

சைவ கோவில்கள், பாரம்பரியமாக மக்கள் வழிபட்டுவந்த கோவில்கள் அழிக்கப்படுவதும் - அங்கு மக்கள் செல்வதை தடுப்பதும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் - என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சிங்கள - பௌத்த பேரினவாதிகள், வடக்கு - கிழக்கில் மத ஆதிக்கத்தை திணித்து அதன் மூலமாக ஓர் இன மேலாதிக்கத்தை திணிக்கின்ற செயல் பாட்டை கிரமமான முறையில் ஒரு நிகழ்ச்சி நிரலுடன் முன்னெடுக்கின்றனர் என்றும் அவர் சாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஒரு நாட்டில் மக்களுக்கு இருக்கின்ற அடிப்படையான உரிமைகள், பாதுகாக்கப்பட வேண்டும். மாறாக அதனை எந்த தரப்பினராலும் நிராகரிக்க முடியாது. குறிப்பாக, தனி மனிதன் சிந்திக்கின்ற உரிமை மற்றும் தான் சார்ந்த மதத்தை வழிபடுகின்ற

15

# பண்ணை அம்மன் சிலையை அகற்றுவதை ஆட்சேபிப்பதற்கு இந்து அமைப்புகள் முடிவு!

## இன்றைய வழக்கில் ஆதரவாக வாதிடுமாறு அனைத்து சட்டத்தரணிகளுக்கும் அழைப்பு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

**யாழ்ப்பாணம் பண்ணையில் தீவகத்துக்கு பயணிக்கும் வீதியில் அமைக்கப்பட்ட அம்மன் சிலையை அகற்றுவதற்கு ஆட்சேபனை தெரிவித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இன்றைய தினம் முற்படுவதற்கு இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.**

இன்றைய தினம் காலை 9.30 மணியளவில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவுள்ள நிலையில், இன்றைய தினம் யாழ்ப்பாணத்தின் அனைத்து சட்டத் தரணிகளும் ஆதரவாக வாதிடுவதற்கு முன்வருமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அம்மன் சிலையைப் பாதுகாக்கும் நோக்கில் நல்லை ஆதீனத்தில் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் தலைமையில் நேற்று திங்கட்கிழமை கூட்டம் ஒன்று நடைபெற்றது. இதில் இந்து

15

## சர்வ கட்சி அரசு அமைக்க ஏப். 25 ஜனாதிபதி அழைப்பு?

கொழும்பு, ஏப். 18

சர்வ கட்சி அரசாங்கம் அமைப்பதற்கான அழைப்பை எதிர்வரும் 25ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் விடுப்பார் என்று கூறப்படுகின்றது.

இதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் நடைபெறுவதாக அண்மையில் மனோ கணேசன் எம். பி. தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் வரும் 25ஆம் திகதி பாராளுமன்ற கூட்டத் தொடர் ஆரம்பமாகும்போது சர்வ கட்சி அரசுக்கான அழைப்பு விடுக்கப்படும் என்று தெரிவித்தன.

15

## அரசியல் பிரமுகரின் வீட்டில் தீக்குளித்த பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரின் வீட்டு வளாகத்தில் தீக்குளித்தார் என்று கூறப்படும் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

வலி. வடக்கு பிரதேச சபையில் பணிபுரியும் பால கிருஷ்ணன் விஜிதா (வயது 36) என்பவரே

15

## அமைச்சு பதவிகளை எமக்கும் தரவேண்டும்!

பொதுஜன பெரமுன கட்சி

கொழும்பு, ஏப். 18

நிலையான அரசாங்கத்தை ஸ்தாபிக்க சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பொது ஜன பெரமுனவுக்கு எதிராக செயல்பட்டவர்களுக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்படும் போது பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவாக செயல்பட்டவர்களுக்கு அமைச்சு பதவிகள்

15

## ரயிலுடன் மோதி முதியவர் மரணம்!

யாழ்ப்பாணம்,ஏப்.18

ரயிலுடன் மோதுண்டதில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

மல்லாகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை 6.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த சிவசுப்பிரமணிய சர்மா (வயது 80) என்ற ஓய்வுபெற்ற ஆசிரியரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(ஐ-03)

## நாளை கிளிநொச்சியில் எதிர்ப்புப் போராட்டம்!

**சிறீதரன் எம். பி. அழைப்பு**

கிளிநொச்சி, ஏப். 18

தமிழர் தாயகத்தில் செயலுரு பெறும் இன அழிப்பு செயல்பாடுகளை நிறுத்த வலியுறுத்தி கிளிநொச்சியில் நாளைய தினம் அடையாள எதிர்ப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி சேவை சந்தை வளாகத்தில் நடைபெறவுள்ள இந்த எதிர்ப்புப் போராட்டத்துக்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

தியாகத் தாய் அன்னை பூபதியின் 35 ஆவது ஆண்டு நினைவு நாளில் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்தில் அனைவரையும் பங்கேற்குமாறு அழைத்துள்ள அவர்,

தேசிய இனப் பிரச்னைக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்க வலியுறுத்தல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதியைப் பெற்றுக்கொடுத்தல், அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்த வலியுறுத்தல், சமகாலத்தில் இலங்கைத் தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் அதனோடு இணைந்த அரச திணைக்களங்களால், வடக்கு

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

முன்னரும் ஒரு தடவை இதுபற்றி இந்தப் பத்தியில் எழுதியது ஞாபகம்.

அப்போது யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். திடீரென்று விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தி அதனால் படையினருக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுவிட்டால், அரசாங்கம் அதனால் தெற்கில் பரபரப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்காக உலகக் கிண்ண கிரிக்கெட்டில் இறுதிப் போட்டியில் இலங்கை வெற்றிபெற்ற போட்டியை ரூபவாகினியில் மறுஒளிபரப்புச் செய்வார்கள்.

மக்கள் எல்லோரும் அமைதியாக இருந்து அந்தப் போட்டியை ரசித்துக் கொண்டிருப்பார்கள். நாட்டில் நடக்கின்ற எந்த விசயத்தைப் பற்றியும் அவர்கள் அக்கறைப் படமாட்டார்கள்.

இந்தத் தகவலை எனக்கு சொன்னவர் ஓர் உயர் பாதுகாப்பு அதிகாரிதான்.

ஏன் இந்த விடயம் இப்போது ஞாபகத்துக்கு வந்தது என்பதை வாசகர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகின்றேன்.

உள்ளூராட்சி தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டதால் அது குறித்து குரல் எழுப்பி வந்த அரசியல் கட்சிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், தொழில்சங்கங்களின் கவனம் இப்போது அதன்மீது இல்லை. உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படாததால் மக்களின் ஜனநாயக உரிமையே பறிபோய்விட்டது என்று கூக்குரலிட்டவர்கள் இப்போது அதைப்பற்றி வாய்திறப்பதில்லை.

மாறாக அவர்கள் கவனம் முழுவதும் இந்தப் புதிய பயங்கரவாத தடைச் சட்டத்தின் மீதே திரும்பியிருக்கின்றது.

ஏற்கனவே, அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் எதற்காகக் கொண்டுவரப்பட்டது என்பது தெரிந்ததுதான். தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை அடக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட அந்த சட்டத்தை யுத்தம் முடிவடைந்த பின்னரும் அமுலில் வைத்திருக்கத் தேவையில்லை என்று பல்வேறு தரப்பினரும் குரல் எழுப்பி வந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியம் தான் வழங்கும் ஜி. பி. எஸ். பிளஸ் வரிச்சலுகையை தொடரவேண்டுமானால் பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று நிபந்தனை கூட விதித்திருந்தது.

தமிழ் தரப்பிலிருந்தும், அதனை நீக்கவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றிருந்தது.

யுத்தம்தான் முடிந்துவிட்டதே அதற்குப் பின்னர் எதற்கு இந்தப் பயங்கரவாத தடைச் சட்டம் என்று கேட்டுக் கொண்டிருந்தவர்கள் வாயை அடக்குவதுபோல ஈஸ்டர் தாக்குதல் நடந்தபோது இந்த நாட்டுக்கு பயங்கரவாத தடைச் சட்டம் ஒன்று தேவைதான் என்ற நிலையை அது ஏற்படுத்தியது.

அப்படி ஒரு சட்டத்தைப் புதிதாகக் கொண்டு வருவதென்றாலும் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக ஒரு புதிய சட்டம் கொண்டு வரப்படவேண்டும் என்றே பலரும் கூறத் தொடங்கியிருந்தனர். ஆனால், அப்படி எந்தவொரு சர்வதேச நியமங்களும் கருத்தில் கொள்ளப்படா மல் புதிய சட்ட வரைவு தயாரிக்கப்பட்டிருப்பதாவே இப்போது பலரும் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இந்த வேளையில், அந்த சட்டத்துக்கு எதிராக பலரும் இப்போது கருத்துச் சொல்வதையும் கண்டன அறிக்கைகள் வெளியிடுவதையும் காண முடிகின்றது. அதிலும் குறிப்பாக நமது தமிழர் தரப்பிலிருந்தும் அதற்கு எதிரான குரல்கள் கேட்கத்தான் செய்கின்றன.

பயங்கரவாதம் என்பதற்கான வரைவிலக்கணம் தெளிவாக இல்லை என்றும் அரசுக்கு எதிராக நடத்தப்படும் கிளர்ச்சிகளையும் பயங்கரவாதமாக அரசாங்கம் சித்தரிக்க முயலும் எனவும் குற்றம்சாட்டப்படுகின்றது.

ஆப்கானில் சோவியத் ஆதரவு அரசாங்கத்துக்கு எதிராக தலிபான்களை உருவாக்கி வளர்த்துவிட்டவர்கள் யார் என்பதும், பின்லேடனை உருவாக்கியவர்களையே பின்லேடன் பின்னர் பதம்பார்த்ததும் நமது காலங்களிலேயே நாம் பார்த்ததுதான்.

இன்று இந்த புதிய பயங்கரவாத தடைச் சட்டத்தை ஆதரிப்பவர்கள் பின்னர் எதிர்க்கட்சியில் இருக்கும்போது தாம் கொண்டு வந்த சட்டத்தாலேயே தண்டிக்கப்படுவார்கள் என்பதை உணர்த்தவேண்டியதுதான் இன்று அந்த சட்டத்தை எதிர்ப்பவர்கள் செய்ய வேண்டிய முதல் பணி. அதை விடுத்து வெறுமனே அதனை எதிர்ப்பதாக அறிக்கை விட்டுக்கொண்டிருப்பதல்ல. அதனை ஆதரிக்க முடியாத அளவுக்கு அதிலுள்ள பாதகங்களை பாராளுமன்றத்தில் அதற்கு ஆதரவு வழங்க இருப்பவர்களுக்கு புரிய வைக்கவேண்டியதுதான் அவசரமாக செய்யவேண்டியது.

அதைவிடுத்து, வெறும் வீர வசனங்களை அல்ல.! அதனை நிறைவேற்ற நாம் அனுமதிக்கமாட்டோம் என்று பாராளுமன்றில் ஓர் ஆசனத்தை வைத்திருப்பவரும் கூறிக்கெண்டிருக்கின்றார். அவரது வீர வசனத்தைப் பார்த்து நாமும் கைதட்டிக் கொண்டிருக்கின்றோம்.

**- ஊர்க்குருவி**

# சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்தக் கோரி முல்லைத்தீவில் மீனவர்கள் நேற்று போராட்டம்!





முல்லைத்தீவு, ஏப். 18

முல்லைத்தீவு கடலில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் சுருக்குவலை மற்றும் ஒளிபாய்ச்சி மீன் பிடித்தல் போன்ற சட்டவிரோத மீன் பிடியை கட்டுப்படுத்த கோரி வட்டுவாகல் பாலத்தில் இருந்து கோட்டாபய கடற்படை முகாம்வரை சென்ற மீனவர்கள் அங்கு கடற்படை முகாமை முற்றுகையிட்டு தங்கள் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த கடற்றொழில் அமைப்புகள் ஏற்பாடு செய்த இந்த கவனவீர்ப்பு போராட்ட நடவடிக்கையின் போது முல்லைத்தீவு கடலை நம்பி 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் சாலை தொக்கம் கொக்கிளாய் வரையான கடற்பரப்பில் சுருக்குவலை, ஒளிபாய்ச்சி மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இதனால், மீனவர்களின் வலைகள் அறுக்கப்படுவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் சிறுமீன் இனங்கள் அழிக்கப்படுகின்றன.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கையை கடற்படையினர் கட்டுப்படுத்த வேண்டும். கடற்றொழில் அமைச்சர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய காவலரண்களை அமைத்து கட்டுப்படுத்தி தருமாறும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இந்த நிலையில், கிழக்கு பிராந்திய கடற்படை கட்டளை தளபதிக்கும் கோட்டாபய கடற்படை முகாம் தளபதிக்கும் மீனவர்கள் மனுவை கையளித்தனர்.

கடற்றொழில் அமைச்சருக்கும் விடயம் தெரியப்படுத்தப்பட்டு, விரைந்து முடிவு எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (ஐ)

# தந்தை செல்வா நினைவுதினம் பண்ணாகத்தில் கடைப்பிடிப்பு!



யாழ்ப்பாணம், ஏப். 18

வட மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் தந்தை செல்வாவின் நினைவு தினம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

பண்ணாகம் பிரதேச சபை மண்டபத்தில் மன்றத்தின் தலைவர் எஸ். மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ. சரவணபவன் கலந்துகொண்டார்.

பண்ணாகத்திலுள்ள அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து நிகழ்வு ஆரம்பமானது. இதன்போது அதிபர்கள், கலைஞர்கள், சமூகப்பணியாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் தந்தை செல்வா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன்போது டான் தொலைக்காட்சி குழுமத்தின் நெறியாளரான பு. சுலக்ஷனுக்கும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ஐ-02-03)

# பாம்பு தீண்டி குடும்பஸ்தர் பலி!

முல்லைத்தீவு, ஏப். 18

குற்றுயிராகக் கிடந்த பாம்பை கையால் தூக்கிய குடும்பஸ்தர் அது தீண்டியதில் உயிரிழந்தார்.

முல்லைத்தீவு - கிழவன் குளம் பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் பாலசுந்தரம் ஜெகதீஸ்வரன் (வயது-47) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த நபர் கடந்த வியாழக்கிழமை குற்றுயிராகக் கிடந்த பாம்பை கையில் தூக்கியுள்ளார். அந்தச் சமயம் அவரை பாம்பு தீண்டியது.

இதையடுத்து, குறித்த நபர் உடனடியாக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். (ஐ)

# போதையில் சாரதி செலுத்திய கார் ஊர்காவற்றுறை கடலில் பாய்ந்தது!

யாழ்ப்பாணம், ஏப். 18

மதுபோதையில் சாரதி செலுத்திய கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கடலுக்குள் பாய்ந்துள்ளது. எனினும், சாரதி தெய்வாதீனமாக எந்த ஆபத்துமின்றி தப்பினார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஊர்காவற்றுறை பகுதியில் இடம்பெற்றது.

விபத்தில் சிக்கிய கார் கிரேனின் உதவியுடன் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து காரின் சாரதியும் கைது செய்யப்பட்டார். போக்குவரத்து விதிகளை மீறிய குற்றத்துக்காக அவர் மீது பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
18.04.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 05

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தோல்வியடைந்த நாடு?

இலங்கை பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபட்டு 75 ஆண்டுகளை நிறைவு செய்திருக்கும் நிலையில் ஒரு தோல்வியடைந்த நாடாக மாறியிருக்கின்றது - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கின்றார். இலங்கை 75ஆவது ஆண்டில்தான் தோல்வியடைந்த நாடாக மாறியிருக்கின்றதா?

சந்திரிகாவின் தந்தையார் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க தனிச்சிங்கள சட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் இலங்கையின் சிங்கள - பௌத்த இனவாத அரசியலுக்கு புதிய முகத்தை வழங்கினார். ஆனால், அதே பண்டாரநாயக்க 1926இல் இலங்கையை மூன்று சமஷ்டி அலகுகளாக மாற்றும் யோசனையை முன்வைத்திருந்தார். அந்தவேளையில், அதனை அன்றைய கொழும்பு தமிழ் தலைமைகள் எதிர்த்திருந்தன.

ஆனால், அரசியலில் அதிகாரத்தை கைப்பற்றும் மோதலில் பண்டாரநாயக்கவின் முற்போக்கான நிலைப்பாடு காணாமல் போய்விட்டது. தமிழர் விரோத இனவாத நிலைப்பாட்டின் மூலம் தென்னிலங்கையின் அதிகார அரசியல் எப்போது கருக்கொண்டதோ அப்போதே இலங்கைத் தீவின் தோல்வி அரசியல் அத்தியாயம் ஆரம்பித்துவிட்டது. இந்தத் தோல்வி அரசியலுக்கு இரண்டு முறை சந்திரிகாவும் தலைமை தாங்கியிருக்கின்றார் என்பதுதான் வரலாறு.

இன்று நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும்போதுதான் நாட்டின் தோல்வி பற்றி தென்னிலங்கையில் உரையாடப்படுகின்றது. ஆனால், இப்போதும்கூட பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களில் ஒன்றாக இனவாத அரசியலை நோக்குவதற்கு தென்னிலங்கை தயாராக இல்லை. இப்போதும் நாட்டின் தேசிய இனப் பிரச்னைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் வெளிப்படையாக உரையாடுவதற்குத் தயாராக இல்லை.

அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தைக்கூட முழுமையாக அமுல்படுத்துவதற்கு தயாராக இல்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால் அரசியலமைப்பிலுள்ள விடயங்களைக்கூட அமுல்படுத்த மறுக்கும் தோல்வியடைந்த நாடுதான் இலங்கை. நாட்டின் அரசியலமைப்பிலுள்ள விடயங்களையே அமுல்படுத்த மறுக்கும் ஒரு நாட்டின் ஆட்சியாளர்கள் எவ்வாறு வெற்றிபெற்றவர்களாக இருக்க முடியும்?

இலங்கையை ஒரு தோல்விடைந்த நாடாக்கியதில் சிங்கள - பௌத்த கட்டமைப்புக்களே பிரதான பங்கு வகித்திருக்கின்றன. இந்த உண்மையை எப்போது சிங்கள அரசியல் சமூகம் உணர்கின்றதோ- அப்போதுதான் இலங்கைக்கானதொரு புதிய அரசியல் கலாசாரம் தொடர்பில் தென்னிலங்கை சிந்திக்க முற்படும். அதுவரையில், இந்த நாடு தோல்விடைந்த நாடாகவே தொடரும்.

சிங்கள அரசியல்வாதிகள் சிங்கள - பௌத்த மத பீடங்களிலிருந்து அரசியலை விடுவிக்காவிட்டால் எந்தவொரு முன்னேற்றகரமான மாற்றங்களும் இந்த நாட்டில் இடம்பெறப் போவதில்லை. எத்தனை ‘அரகலய’க்கள் வந்தாலும்கூட நாட்டின் சிங்கள - பௌத்த கட்டமைப்புகளின் கற்கால சிந்தனைகளின்மீது கேள்வி எழுப்பாவிட்டால், ‘அரகலய’க்களால் எந்தவொரு பயனும் ஏற்படப் போவதில்லை. இவ்வாறான ‘அரகலய’க்களும் சில புதிய சிங்கள-பௌத்தவாதிகளை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்கே பயன்படும்.

# தமிழர் பகுதியில் புத்தர் சிலை நிறுவலாம் அம்மன் சிலையை ஏன் வைக்க முடியாது?

## சித்தார்த்தன் எம். பி. கேள்வி

*யாழ்ப்பாணம், ஏப். 18*

அதிகளவான இந்து மக்கள் வாழ்கின்ற பகுதியில் அம்மன் சிலை ஒன்றை நிறுவக்கூடாது என்று பொலிஸார் சட்டத்தை கையில் எடுப் பது இலங்கையில் மத பாகுபாட்டையும் இன முறுகல்களையும் ஏற்படுத்தும் என்று பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணை சுற்று வட்டப்பகுதியில் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தை பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்பட்ட சிலையை அகற்ற பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற வடக்கு - கிழக்கில் புத்தர் சிலைகளை நிறுவ முடியுமானால் 90 சதவீதமான சைவ மக்கள் வாழும் வடக்கில் நாகபூசணி அம்மன் சிலையை அமைத்து ஏன் வழிபாடு செய்யக்கூடாது.

பௌத்த பிக்குமார் குழுவாக வந்து எந்த சட்ட திட்டங்களுக்கும் மதிப்பளிக்காமல் அத்துமீறி சிலைகளை நிறுவி கொண்டிருக்கின்றனர். குறிப்பாக, விகாரைகள் விஸ்தரிப்புக்காக தனியாருக்கு சொந்தமான



காணிகளை சுவீகரிக்கின்றனர்.

சிங்கள - பௌத்த இனவாதிகள் பௌத்தமயமாக்கல் என்ற தீவிர எண்ணத்துடனும் சிங்கள இனப்பரம்பலை பெருக்குதல் என்ற நோக்கத்துடனும் வட, கிழக்கை ஆக்கிரமிக்கும் நோக்கில் புத்தர் சிலைகளை நிறுவி வருகின்றனர்” என்றும் அவர் சொன்னார். (ஐ)



### அன்னை பூபதி ஊர்தி பவனி:

# மாங்குளத்தில் மக்கள் அஞ்சலி செலுத்தினர்!

*மாங்குளம், ஏப். 18*

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு நோக்கி பயணிக்கும் அன்னை பூபதி ஊர்திக்கு மாங்குளத்தில் மக்கள் பெருவாரியாக திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

இந்திய இராணுவத்துக்கு எதிராக இரு அம்ச கோரிக்கையை முன்வைத்து 30 நாட்கள் தண்ணீரை மட்டும் அருந்தி உண்ணாவிரதம் இருந்து உயிர்த் தியாகம் செய்த அன்னை பூபதியின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இதையொட்டி, யாழ்ப்பாணம் - நல்லூரில் இருந்து அன்னை பூபதி ஊர்தி பவனியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆரம்பித்தது. நேற்று முன்தினம் ஆரம்பமான இந்தப் பேரணி நேற்று இரண்டாம் நாள் மாங்குளத்தை அடைந்தது.

மாங்குளத்தில் மக்கள் வீதிகளில் திரண்டு வந்து அன்னை பூபதிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். மாங்குளம் படைமுகாமை தகர்த்து வீர காவியமான கரும்புலி போர்க்கின் நினைவு தூபியிலும் அஞ்சலி செலுத்தப்பட்டதை அடுத்து ஊர்தி தொடர்ந்தும் பயணித்தது. (ஐ)

# பெரியபுராணம் சொற்பொழிவு தொடர்!

*கொழும்பு, ஏப். 18*


சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் அனுசரணையில் வாராந்தம் சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடக்கும் சொற்பொழிவு தொடர் - 02 சாவற்கட்டு அந்திக்குழி ஞான வைரவர் ஆலய மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குருபூசையை தொடர்ந்து சொற்பொழிவை இளம் சைவப்புலவர் நித்தியபாபுதரன் ‘பாண்டிமாதேவி பணி செய்து நாள்தொறும் பரவ...’ என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவு நிறைவில் கேள்விகள் கேட்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படவுள்ளது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
எதிர்பார்ப்பு நிறைவேறும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்**
அனுபவப் பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி கவர்வீர்கள். புண்ணிய ஸ்தலம் சென்று வருவார்கள். வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மரியாதை கூடும்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். மகிழச்சியான நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். மேலதிகாரி குறை கூறுவார். பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். தாயாரின் உடல் நிலைசீராகும். விஐபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். அமோகமான நாள்.

**துலாம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்த வேலை தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். உதவிகள் கிடைக்கும். புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். சரக்குகளை போராடி விற்க முடியும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**மீனம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வாகனத்தில் கவனம் தேவை. போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். பணிகளை போராடி முடிப்பீர்கள். போராடி வெல்லும் நாள்.

# சாவது தமிழர்களாக இருந்தால் சகிக்கவேண்டும் என்ற நிலை!

## நாம் தமிழர் சீமான் கவலை

மதுரை, ஏப். 18

சாவது தமிழனாக இருந்தால் சகித்துக் கொள்ளலாம். இலட்சக் கணக்கானோர் கடலுக்குள் செத்தாலும், ஆந்திரா செம்மரக் காட்டுக்குள் செத்தாலும், சகித்துக் கொள்ளலாம் இப்படி தான் நிலைமை இருக்கிறது என்று கவலை தெரிவித்துள்ளார் நாம் தமிழர் சீமான்.

நேற்று மதுரையில் செய்தியாளர்களை சீமான் சந்தித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகிறார்கள். அரசாங்கத்துக்கு இந்தியர்கள் என்றால் ஹிந்தி பேசுபவர்கள் மட்டும்தான். ஆட்சியாளர்களுக்கு எங்களுடைய நிலம், வளம், எல்லாம் தேவைப்படுகிறது. வருமானம் தேவைப்படுகிறது. ஆனால், எங்களுடைய உணர்வு, உயிர் உரிமையை எல்லாம் அவர்களுக்கு பொருட்டே கிடையாது. அதுதான் பிரச்னை.

வட இந்திய தொழிலாளர்கள் தமிழகம் வருவது வயிற்றுப் பசிக்காக வருகிறார்கள், பாவம் எனக் கூறுகின்றனர். நாங்கள் மீன் பிடிக்க வசதி வாய்ப்புக்காக போகிறோமா?



சாவது தமிழனாக இருந்தால் சகித்துக் கொள்ளலாம். இலட்சக்கணக்கானோர் கடலுக்குள் செத்தாலும், ஆந்திரா செம்மரக் காட்டுக்குள் செத்தாலும், சகித்துக் கொள்ளலாம் இப்படிதான் நிலைமை இருக்கிறது" எனக் கூறினார்.

(ஐ)

# எங்கும் தமிழ் எதிலும் தமிழ் எட்டிவிடும் தொலைவிலேயே

## ராமதாஸ் அறிக்கை

சென்னை, ஏப். 18

"எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்ற இலக்கை எட்டும் நாள், கண்ணுக்கு தெரியும் தொலைவில் தான் இருக்கிறது. அதை எட்டும் வரை ஓய்வெடுக்காமல் உழைத்துக் கொண்டே இருப்போம் என பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "தமிழகத்தில் சிதைக்கப்பட்டு வரும் தமிழ் மொழியை மீட்டெடுக்கும் நோக்கத்துடன் நாம் மேற்கொண்ட "தமிழைத் தேடி…" விழிப்புணர்வு பரப்புரை பயணம் ஆக்கப்பூர்வ தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இது மகிழ்ச்சியளிக்கும் செய்தி தான். ஆனால், மனநிறைவடைந்து இளைப்பாற வேண்டிய செய்தியல்ல.

உயரத்தை நோக்கி பயணிக்கும்போது இளைப்பாறலாம் அதற்கு இடமும், வாய்ப்பும் உண்டு. ஆனால், மிகப்பெரிய பள்ளத்திலிருந்து மீண்டு வரும் போதோ அல்லது ஒருவரை மீட்டு வரும் போதோ நாம் இளைப்பாறுவதற்கு இடமும் கிடையாது - வாய்ப்பும் இருக்காது. அத்தகைய சூழலில் இளைப்பாறினால், நாம் எவ்வளவு தொலைவு மீண்டு வந்தோமோ அல்லது மீட்டெடுத்து வந்தோமோ அவ்வளவு தொலைவு பின்னோக்கிச் செல்ல வேண்டியிருக்கும்.

தமிழன்னைக்கு தொண்டு செய்வதன் மூலம் என்னை மகிழ்ச்சிப்படுத்துங்கள். தமிழைத்தேடி இயக்கத்தின் பணிகள் பயனளிக்கத் தொடங்கியுள்ளன. அதை நினைத்து இளைப்பாறாமல் தொடர்ந்து அதே வேகத்தில் தமிழ்ப் பணிகளை செய்வோம். அவ்வாறு செய்தால், "எங்கும் தமிழ்…. எதிலும் தமிழ்" என்ற இலக்கை எட்டும் நாள், கண்ணுக்கு தெரியும் தொலைவில்தான் இருக்கிறது. அதை எட்டும் வரை ஓய்வெடுக்காமல் உழைத்துக் கொண்டே இருப்போம் பாட்டாளி சொந்தங்களே" - என்றுள்ளது.

(ஐ)

# 500 கோடியே ஒரு ரூபாய் இழப்பீடு தர வேண்டும்!

## தி. மு. கவை கேட்கிறார் அண்ணாமலை

சென்னை, ஏப். 18

ரூ.500 கோடி இழப்பீடு தர வேண்டும். 48 மணி நேரத்தில் மன்னிப்பு கேட்க வேண்டும் என பா. ஜ. க. தமிழக தலைவர் அண்ணாமலைக்கு ஆர்.எஸ்.பாரதி அறிவித்தல் அனுப்பியிருந்த நிலையில், திமுகவிடம் 500 கோடியே ஒரு ரூபாய் இழப்பீடு கேட்டு அண்ணாமலை பதில் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும், சட்ட நடவடிக்கைக்கு தான் தயாராக இருக்கிறார் எனக் கூறி அவர் வெளியிட்ட 3 பக்க அறிக்கையில், "என் மீதும் பாரதிய ஜனதா கட்சியின் மீதும் ஆதாரமற்ற குற்றச்சாட்டை பொதுவெளியில் வைத்ததற்கு ரூ. 500 கோடியே ஒரு ரூபாய் இழப்பீ டாகக் கோருகிறேன், இதை நான் பிரதமர் பாதுகாப்பு நிதி யத்துக்கு செலுத்த விரும்புகிறேன்.

4400 கோடி ரூபாய் மோசடி செய்த ஹிஜாவு நிதி நிறுவனத்தின் உரிமையாளர்கள் கடந்த 2021 மே 19ஆம் திகதி தமிழக முதல்வரை சந்தித்து முதலமைச்சர் நிவாரண நிதிக்கு ரூ.25 இலட்சம் நன்கொடை அளித்த படம் ஒன்றை சமூக வலைதளத்தில் நான்பார்த்தேன். 100 கோடி ரூபாய் பெற்றுக் கொண்டு இந்த மோசடியில் மு. க. ஸ்டாலின் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளார் என்று நான் குற்றச்சாட்டு வைக்கலாமா என்றும் ஆர். எஸ். பாரதியிடம் கேள்வி எழுப்புகி றேன்.

அடுத்த 48 மணி நேரத்தில் என் மீதும் எனது கட்சியின் மீதும் சுமத்தப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கு விளக்கம் அளிக்காவிட்டால் ஆர்.எஸ். பாரதி மீது தகுந்த வழக்கு தொடுக்கப்படும் என்று மிகப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நீங்கள் அனுப்பிய சட்ட அறிக்கைக்கு பதிலும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை வைத்தமைக்கு இழப்பீடு கோரும் சட்ட அறிக்கையும் உங்களை விரைவில் வந்து சேரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# பொதுச் செயலராக பழனிசாமி; அ. தி. மு. க. செயல்குழு அங்கீகாரம்!

சென்னை, ஏப். 18

அ. தி. மு. க. பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட பழனிசாமிக்கு, சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சி செயல்குழுக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. மேலும், மதுரையில் வரும் ஓக. 20ஆம் திகதி மாநாடு நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

அ. தி. மு. க. பொதுச் செயலாளராக பழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில், கட்சியின் அவசர செயல்குழுக் கூட்டம் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் பழனிசாமி முன்னிலை வகித்தார்.

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தல், கட்சியில் புதிய உறுப்பினர்களை சேர்ப்பது, கட்சிப் பணிகளைத் தீவிரப்படுத்துவது குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. தொடர்ந்து, 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அ. தி. மு. க. பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பழனிசாமிக்கு கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டன.

(ஐ)

# போதையில் வீட்டில் ரகளை செய்த கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம்!

கொழும்பு, ஏப். 18

சிங்கள புத்தாண்டு தினத்தன்று குடிபோதையில் வீட்டுக்கு வந்து தந்தையை தாக்கி வீட்டில் உள்ள சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் குருநாகல் அளவ்வ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வலஸ்முல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் கான்ஸ்டபிளின் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபுல் சந்தன அபேசிங்கவின் பணிப்புரையின் பேரில் ஆரம்பகட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு இந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

வலஸ்முல்லை பிரதேசத்தில் அமைந்துள்ள வீட்டுக்கு கான்ஸ்டபிள் வந்து கடந்த 14ஆம் திகதி இரவு அப்பகுதி யில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியை பார்வையிடச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 75 வயதில் இலங்கை தோல்வியுற்ற நாடு!

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



கொழும்பு, ஏப். 18

**1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றபோது பொறாமைப்படக்கூடிய சமூகக் குறிகாட்டிகளைக் கொண்டிருந்தது. எனினும் 75 வயதில் இலங்கை ஒரு 'தோல்வியுற்ற நாடு' என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.**

2023 ஆம் ஆண்டின் யுனெஸ்கோ நல்லெண்ணத் தூதுவர் மதன்ஜீத் சிங்கின் விரிவுரையின்போது, அவர் இதனை குறிப்பிட்டார்.

தெற்காசிய அறக்கட்டளை மற்றும் சென்னை ஆசிய இதழியல் கல்லூரி என்பன இதனை இணையவழியாக ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்-

75 ஆண்டுகள் என்பது ஒரு தேசம் கணிசமான முன்னேற்றத்தை அடைய எடுக்கும் நீண்ட காலமாகும்.

இந்த நிலையில் காலனித்துவ ஆட்சியாளர்களால் 450 வருடங்கள் அழிக்கப்பட்ட பின்னரும் கூட, சுதந்திரத்தின் போது, இலங்கை சிறந்த சமூக - பொருளாதார குறிகாட்டிகளில் சிலவற்றைக் கொண்டிருந்தது.

எனினும் இன்று 75 வயதில், இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடாக மாறிவிட்டது.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு ராஜபக்ஷர்களே காரணம்.

ஊழல் மற்றும் முறையான தேசத்தை கட்டியெழுப்புவதில் இலங்கையின் தோல்வியே தற்போதைய நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும்.

ராஜபக்ஷக்கள் காலத்தில், நீதித்துறை, காவல்துறை மற்றும் பொதுச் சேவை உட்பட ஜனநாயக நிர்வாகத்தின் முக்கிய தூண்களில் பரவலான ஊழல் ஊடுருவியது.

அதேநேரம் இலங்கை, பல்லின மற்றும் சகல மத சமூகங்களை ஒன்றிணைத்து ஒரு ஐக்கிய பன்மைத்துவ அரசை உருவாக்கத் தவறிவிட்டது.

சிறுபான்மையினரின் பிரச்னைக்கான நியாயமான தீர்வு, அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமைகள் மற்றும் சிறுபான்மையினருடன் அரசியல் அதிகாரப் பகிர்வு முறையை உறுதிப்படுத்த கடந்த 75 ஆண்டுகளாக தவறிவிட்டோம்.

அதேநேரம், 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தனவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு 'ஜனநாயகமானது அல்ல'.

2000ஆம் ஆண்டில் புதிய அரசியலமைப்புக்கான எனது சொந்த முன்மொழிவுக்கு ஆதரவு கிடைக்கவில்லை-என்றார். (அ)

# புனர்வாழ்வு முகாமிலிருந்து ஒன்பது பேர் தப்பியோட்டம்

## இருவர் உடனடியாக கைது

கொழும்பு, ஏப். 18

பதுளை, தல்தென திறந்த வெளி புனர்வாழ்வு தடுப்பு முகாமிலிருந்து ஒன்பது நபர்கள் தப்பிச் சென்றனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

நேற்று அதிகாலை குறித்த கைதிகள் தப்பிச் சென்றனர் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏகநாயக்க குறிப்பிட்டார்.

தப்பியோடிய நபர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தப்பியோடிய ஏனைய நபர்களை கைதுசெய்வதற்கான தேடுதல் நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சிறு மற்றும் போதைப் பொருள் தொடர்பிலான குற்றங்களுக்காகத் தண்டனை பெற்று, புனர்வாழ்வு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ள இளைஞர்களே இவ்வாறு தப்பிச் சென்றவர்கள் என்றும் கூறப்பட்டது. (அ)

# 13, 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் விபத்துக்களால் 14 பேர் மரணம்

கொழும்பு, ஏப். 18

தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தை உள்ளடக்கிய ஏப்ரல் 13, 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் வீதி விபத்துக்களால் 14 மரணங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் பெருமளவானோர் காயமடைந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

வாகனச் சாரதிகளை அவதானமாக செயற்படுமாறும், மது அருந்திவிட்டு வாகனம் செலுத்தவேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (அ)

# இலங்கை வாங்கிய கடனை செலுத்தும் காலத்தை நீடிக்கின்றது பங்களாதேஷ்!

கொழும்பு, ஏப். 18

இலங்கை பெற்றுக் கொண்ட கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசத்தை பங்களாதேஷ் அரசாங்கம் மேலும் நீடித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கு வழங்கிய 200 மில்லியன் டொலர் கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசத்தை 06 மாதங்களுக்கு நீடிக்க பங்களாதேஷ் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த கடனுக்கான முதல் தவணையை ஒகஸ்ட் மாதத்திலும் மற்றொரு தவணையை செப்ரெம்பர் மாதத்திலும் செலுத்த இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க, இந்த ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி, பங்களாதேஷ் மத்திய வங்கி, இலங்கைக்கு வழங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடித்தது.

மகிந்த ராஜபக்ஷவின் பங்களாதேஷ் விஜயத்தின்போது நடைமுறைப்படுத்தப்பட்ட 2021 ஆம் ஆண்டு நாணய மாற்று ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்கு 200 மில்லியன் டொலர்களை பங்களாதேஷ் வழங்கியது.

பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக நாட்டில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக ஆசிய கிளியரிங் அசோசியேஷன் பொறிமுறைக்கு வெளியே நடைபெறும் முதல் நாணய பரிமாற்றம் இதுவாகும்.

ஆசிய கிளியரிங் அசோசியேஷன் என்பது பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, ஈரான், மியன்மார், நேபாளம், பாகிஸ்தான், இலங்கை மற்றும் மாலைதீவுகளை உள்ளடக்கிய ஒரு ஏற்பாடாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தென்கடலில் சிக்கியது 175 கிலோ ஹெரோயின்!

## 350 கோடி ரூபாய் பெறுமதியானது



கொழும்பு, ஏப். 18

இலங்கையின் தெற்கு கடற்பரப்பில் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப்பொருளின் பெறுமதி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப்பொருளின் பெறுமதி 350 கோடி ரூபா என கணக்கிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு தெற்கே சர்வதேச கடற்பரப்பில், நேற்று முன்தினம் பெருந்தொகையாக போதைப்பொருளுடன் படகொன்று சுற்றிவளைக்கப்பட்டதுடன், அதிலிருந்த 6 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள், போதைப்பொருளுடன் நேற்று காலை காலி மீன்பிடித் துறைமுகத்துக்கு கடற்படையினரால் அழைத்துவரப்பட்டனர்.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளின் நிறை சுமார் 175 கிலோகிராம் என அளவிடப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார். சந்தேகநபர்கள், போதைப் பொருளுடன் மேலதிக விசார ணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# கிணற்றில் வீழ்ந்து குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். வேலணை 6ஆம் வட்டாரத்தில் கிணற்றுக்குள் வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். வேலணை 6ஆம் வட்டாரத்தை சேர்ந்த இராசதுரை ரமணன் (வயது - 52) என்பவரே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது கிணற்றுக் கட்டில் சறுக்கி விழுந்து குறித்த நபர் உயிரிழந்தாரெனத் தெரிய வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 13ஐ நிறைவேற்றுமாறு இலங்கைக்கு இந்தியா நிபந்தனை விதிக்கமுடியாது!

## கூறுகிறார் ரோஹித அபேகுணவர்த்தன

கொழும்பு,ஏப். 18

"இந்தியா, இலங்கைக்கு நிபந்தனைகளை விதிக்கின்றது. நாட்டுக்கு ஒவ்வாத 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தச் சொல்கின்றது. இலங்கையில் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும் வாழ்கின்றனர் என்பதை இந்தியா உணர்ந்துகொள்ள வேண்டும்." - இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பாரா ளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இலங்கைக்கு இந்தியா எவ்வளவு முக்கியமானதோ அதேபோல் சீனாவும் முக்கியம். இலங்கையின் அபிவிருத்தியில் சீனா பெரும் பங்கு வகிக்கின்றது. இந்தியாவும் தன்னால் இயன்ற உதவிகளை இலங்கைக்கு வழங்கி வருகின்றது. ஆனால், இந்தியா நிபந்தனைகளுடன் தான் உதவிகள் வழங்குகின்றது. சீனா இலங்கைக்கு நிபந்தனைகள் எதனையும் விதிப்பதில்லை.

இந்தியாவின் நிபந்தனைகள் அரசியல் நிபந்தனைகளாகும். இலங்கைக்கு ஒவ்வாத 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்றுமாறு இலங்கைக்கு இந்தியா நிபந்தனை விதிப்பதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதேபோல் இலங்கையில் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் அதிகளவில் வாழ்கின்றார்கள் என்பதை இந்தியா மறக்கக்கூடாது-என்றார். (அ)



# தேசிய அரசு குறித்து ஜனாதிபதி கவனம்!



கொழும்பு, ஏப். 18

தேசிய அரசாங்கம் அமைப்பது குறித்து ஜனாதிபதிரணில் விக்ரமசிங்க மீண்டும் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 25 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் போது ஜனாதிபதி இந்த அழைப்பை விடுப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய அரசாங்கம் அமைக்கும் திட்டத்துக்கு ஆதரவளிக்குமாறு அனைத்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுக்க உள்ளதாக ஜனாதிபதி தம்மிடம் கூறியுள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியையும், ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றாக இணைக்க தாமும் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமும் முயற்சித்தபோதிலும் இந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

எனினும், பிரதமர் பதவி குறித்து ஜனாதிபதியை சந்தித்த போது எவ்வித விடயங்களும் பேசப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

இருப்பினும் சில ஊடகங்களில் வெளியான தகவல்கள் அடிப்படையற்றவை எனவும் மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# உள்ளூர் முட்டை விலையை குறைப்பதற்கு தீர்மானம்!

கொழும்பு, ஏப். 18

உள்ளூர் முட்டை ஒன்றை 50 ரூபாவிற்கும் குறைவாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தமது தொழிற்சங்க பிரதிநிதிகள் சந்தித்து இந்த தீர்மானத்தை எடுத்ததாக அவர் கூறினார்.

இதேவேளை, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளின் அளவை அதிகரித்து, அவற்றை நுகர்வோருக்கு விற்பனை செய்ய வேண்டும் என அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கத்தின் செயலாளர் அனுர மாரசிங்க தெரிவித்தார். (அ)

# ஆபத்தான நிலையில் கோட்டை மேம்பாலம்!

கொழும்பு, ஏப். 18

தினமும் ஏராளமான மக்கள் பயணிக்கும் கோட்டை மேம்பாலம் தற்போது பல இடங்களில் சேதமடைந்து காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கொழும்பு மாநகர சபைக்கு அப்பகுதி வர்த்தகர்கள் அறிவித்த போதும் பல தடவைகள் வருகை தந்து சேதமடைந்த இடங்களை அடையாளப்படுத்திச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இதுவரை குறித்த பாலத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என வியாபாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற போராட்டத்தின் போது பெருமளவான மக்கள் பாலத்தில் ஏறியதாக வர்த்தகர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

விபத்து ஏற்படும் முன், பாலத்தை சீரமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏராளமான மக்கள் பாலத்தின் கீழ் மற்றும் மேல் வியாபாரம் செய்கின்றனர். மேலும் கோட்டை ரயில் நிலையத்திற்கு வரும் பெருமளவான பயணிகள் பாலத்தைப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறான நிலையில் ஏற்படக்கூடிய விபத்தை அலட்சியப்படுத்தினால் அது பெரும் விபரீதமாக அமையும் எனவும் வியாபாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# இலங்கை குரங்குகளை பெற அமெரிக்காவும் விண்ணப்பம்

கொழும்பு, ஏப். 18

இலங்கையில் இருந்து குரங்குகளைபெற அமெரிக்கா விண்ணப்பித்துள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில்- இலங்கையில் இருந்து குரங்குகளை பெற சீனா தயாராகி வருவதாகத் தகவல் கிடைத்ததையடுத்து, இந்த நாட்டிலிருந்து குரங்குகளை பெற அமெரிக்காவும் விண்ணப்பித்துள்ளது.

அமெரிக்காவிற்கு தேவையான குரங்குகளின் எண்ணிக்கை இதுவரை அறிவிக்கப்படவில்லை.

சீனாவுக்கு100,000 குரங்குகளை வழங்குவதற்கான வழிமுறைகளை தயாரிப்பதற்கான குழுவொன்றை நியமிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

விலங்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதே பொருத்தமானது. விலங்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டாம் என எவரும் கூறவில்லை-என்றார். (அ)

# கோளாறால் ஆஸியில் தரித்து நின்ற சிறீலங்கன் விமானம் இலங்கைக்கு!

கொழும்பு, ஏப். 18

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் விமான நிலையத்தில் தொழிநுட்பக் கோளாறுக்குள்ளான சிறிலங்கன் விமானம் நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த விமானம் கடந்த விமானம் 15 ஆம் திகதி இலங்கைக்குப் புறப்படவிருந்த நிலையிலேயே தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தனது பயணத்தை தொடர முடியாத நிலைமைக்கு உள்ளானது.

இந்த விமானத்தில் 5 குழந்தைகள் உட்பட 218 பயணிகள் மற்றும்17 பணியாளர்கள் காணப்பட்டனர்.

சிறிலங்கன் எயார்லைன்ஸுக்குச் சொந்தமான யு.எல்-605 04/17 என்ற விமானமே நேற்றுக் காலை 07.40 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

பிரான்ஸில் தயாரிக்கப்பட்ட ஏ-330 எயார்பஸ் விமானம் கடந்த 15 ஆம் திகதி இரவு 10.25 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையவிருந்தது. ஆனால், விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சேவை இரத்து செய்யப்பட்டது.

பின்னர் சிறிலங்கன் எயார்லைன்ஸின் 6 பொறியியலாளர்கள் குழு அங்கு சென்று இந்த விமானத்தை திருத்தியது. இதனையடுத்து இந்த விமானம் கட்டுநாயக்கவை நேற்றுக் காலை வந்தடைந்தது. (அ)

# எல்லை மீள் நிர்ணயத்தில் உள்ள குறைபாடுகளைத் தெரிவியுங்கள்

## சமூகமட்ட அமைப்புகளிடம் சிறீதரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஏப். 18

தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எல்லை மீள் நிருணய வரைவு அறிக்கையில் பல்வேறு குறைபாடுகள் உள்ளதையும், அது தொடர்பில் மக்களிடத்தே அதிருப்தி நிலவுவதையும் அவதானிக்க முடிவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

குறிப்பாக, கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுடைய ஆலோசனைகள் எவையும் பெறப்படாமலேயே இவ் எல்லை மீள் நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது, மக்களுக்கும் கிராமங்களுக்கும் இடையிலான நிலத்தொடர்பு, நிருவாகத் தொடர்பு, சமூக ஊடாட்டங்கள், போக்குவரத்து உள்ளிட்ட காரணிகள் கருத்திற்கொள்ளப்படாமை மாவட்டத்தின் சமூக, அரசியல் மற்றும் நிருவாக ஸ்திரத்தன்மையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய பாதிப்புக்கள் தொடர்பில், அந்தந்த வட்டாரங்களைச் சேர்ந்த சமூகமட்ட அமைப்புக்கள் தங்களின் எழுத்துமூல பரிந்துரைகளை, எல்லை மீள் நிர்ணயக் குழுவின் மாவட்டத் தலைவரான அரசாங்க அதிபருக்கு முகவரியிட்டு, தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளருக்கு பிரதியிட்டு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைப்பதன் மூலம், உரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கான அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும்- என்றார். (அ)

# கால்நடைகள் உறைவிடமாக முல்லை. பஸ் நிலையம்

முல்லைத்தீவு, ஏப். 18

முல்லைத்தீவு நகரத்துக்கான பஸ் நிலையம் கடந்த 2020ஆம் ஆண்டு திறந்துவைக்கப்பட்ட போதும், இதுவரை பொதுமக்களுக்கான பயன்பாட்டில் இல்லாமல், கால்நடைகளின் உறைவிடமாக காணப்படுகிறது.

முல்லைத்தீவு நகரத்துக்கான புதிய பஸ் நிலையமானது நகர விருத்தி நீர்வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்டது.

அதன் கட்டுமானப் பணிகள் நிறைவுபெறாத நிலையில் ஆரம்பகட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட் டுவந்தபோதே கடந்த 2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8ஆம் திகதி பொதுமக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது.

எனினும், கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த பஸ் நிலையம் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக அன்றி, கால்நடைகளின் வசிப்பிடமாக காணப்படுகிறது.

இந்த பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன வசதிகள் கொண்ட கடைத்தொகுதிகளும், இதுவரை திறந்து வைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

புதிய பயங்கரவாதச் சட்டத்தால்

# மகிந்த குடும்பத்தினரே சிறை செல்ல நேரிடலாம்

## கூறுகின்றார் சிறிதரன் எம்.பி.

**கிளிநொச்சி, ஏப். 18**

**பயங்கரவாத தடைச் சட்டமானது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அது விவாதத்துக்கு வரும்போது பெரும் பான்மைப் பலத்தை கொண்டுள்ள மகிந்த குடும்பமே அதற்குள் சிக்கி, சிறை செல்லும் நிலை ஏற்படலாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.**



கிளிநொச்சியில் நேற்று முன் தினம் கட்சியின் செயற்பாட்டா ளர்கள் மத்தியில் உரையாற்றும் போது இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்-

அடுத்தடுத்த வாரங்களில் மிக மிக ஆபத்தான பயங்கரவாத தடைச் சட்டம் பாராளுமன்றத் தில் விவாதத்துக்கு விடப்படும். அப்போது அதற்கு பெரும்பான் மைப் பலம் தேவைப்படும்.

இந்நிலையில் இப்போது, பெரும்பான்மை வாக்குகளை அளிக்கக்கூடிய மகிந்த ராஜ பக்ஷ குடும்பமே இந்த சட்டத் துக்குள் அகப்பட்டு சிறை செல் லும் நிலை ஏற்படலாம்.

ஏற்கனவே, ஜே.ஆர். ஜெயவர் தனவினால் பாராளுமன்றத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டத்தை வைத்து பல்லாயிரக் கணக்கான இளைஞர்களை கொன்று குவித்துத் தள்ளியுள் ளனர்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உள்ள எதிர்காலச் சிந்தனை வேறு. மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தி டம் உள்ள எதிர்காலச் சிந்தனை கள் வேறு. அரசுக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபட்டால் இந்த சட்டத்தை பயன்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

ரணில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக தான் வரவேண்டும் என்பதற் காக அனைத்து முயற்சிகளை யும் மேற்கொண்டு வருகின்றார். அவ்வாறான முயற்சிகளில் எந்த ஒரு தேர்தலையும் தற்போது நடத்துவதற்கு அவர் தயாராக இல்லை.

ஏற்கனவே, இருந்த பயங்கர வாத தடைச் சட்டத்தை விடவும் மிக மிக ஆபத்தான சட்டமா கவே இப்புதிய சட்டம் உள்ளது.

தனிநபர் கருத்துச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் எதுவும் இல்லை - என்றார். (அ)

# இரத்தினபுரியில் காசநோய் அதிகமாக பரவும் அபாயம்!

கொழும்பு, ஏப். 18

இரத்தினபுரி மாவட்டத்தில் காசநோய் அதிகமாக பரவும் அபாயம் காணப்படுவதாக இரத் தினபுரி போதனா வைத்தியசா லையின் சுவாச நோய் நிபுணர் வைத்தியர் நிரஞ்சன் திஸாநா யக்க தெரிவித்துள்ளார்.

காசநோய் தடுப்பு தொடர் பான பொது விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்-

காசநோய் குறித்த மக்களின் அறியாமையும் பாதிப்பை ஏற்ப டுத்தியுள்ளது.

கடந்த வருடம் இலங்கையில் 331 காசநோயாளிகள் கண்டறி யப்பட்டனர்.

இதில் 30 பேர் உயிரிழந்துள்ள நிலையில், இது கண்டறியப் பட்ட நோயாளர்களில் சுமார் 10 சதவீதம் என்பது கவலைக் குரிய விடயம் என சுகாதாரத்து றையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் வருடாந்தம் சுமார் 14,000 காசநோயாளிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டா லும், பத்தாயிரம் பேர் மட்டுமே கண்டறியப்படுகின்றனர்.

சுமார் 4000 நோயாளர்கள் பதிவாகாமல் இருப்பதற்கு அறி யாமையே முக்கிய காரணம்- என்றார். (அ)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 18

இலங்கை மத்திய வங்கியின் நேற்றைய நாணய மாற்று விவ ரத்தின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவுப் பெறு மதி 312.07 ரூபாவாக பதிவாகி யுள்ளது.

விற்பனை பெறுமதி 327.02 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இதன்படி அமெரிக்க டொல ருக்கு நிகராக இலங்கை ரூபா வின் பெறுமதியைக் கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நேற்று சற்று வீழ்ச்சியடைந்துள் ளது. (அ)

# இலங்கைக் கடலில் மீனினம் இல்லாமல் போகும் அபாயம்

## அன்ரனி ஜேசுதாசன் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 18

இலங்கையில் சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றது. இந்நி லையில் சட்டவிரோத கட லட்டை பண்ணைகள் தொடர் பில் பல முறைப்பாடுகள் முன் வைத்த போதும் இது தொடர் பில் அமைச்சர் எவ்வித நடவடிக் கைகளையும் மேற்கொள்ள வில்லை என அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட் டமைப்பின் தேசிய அமைப்பா ளர் அன்ரனி ஜேசுதாசன் தெரி வித்தார்.

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக் கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்- சட்டவிரோத கடற்றொ ழில் நடவடிக்கைகளால் எதிர் வரும் காலங்களில் கடலில் மீனினம் இல்லாமல் போகும் அபாயம் உள்ளது.

அதேவேளை, இந்திய மீனவர் கள் உறவுகளாக காணப்பட்டா லும் தொடர்ந்தும் சட்டவி ரோத நடவடிக்கையில் ஈடுபடு கின்றனர்

தற்போது இந்தியாவில் 61 நாட்கள் மீன் உற்பத்தி காலமாக அறிவித்து மீன்பிடியை நிறுத்தி யுள்ளனர். எமது பகுதியிலுள்ள அதிக மீன் உற்பத்தியாகும் முரு கைக் கற்பாறைகள் உள்ள பகுதி கள் சட்டவிரோத ரோலர் தொழில்கள் மூலம் பாதிப்ப டைகின்றது.

எனவே இவ்வாறான சட்ட விரோத நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் தடுத்து நிறுத்தவேண்டும்-என்றார். (அ)

# எதிர்வரும் 25ஆம் திகதி பாராளுமன்று கூடுகிறது

கொழும்பு, ஏப். 18

புத்தாண்டுக்குப் பின்னர் பாராளுமன்றம் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கூடவுள்ள நிலையில் அன்றைய தினம் சர்வதேச நாணய நிதியத் துடன் இலங்கை செய்துகொண் டுள்ள அறிக்கை தொடர்பில் விவாதம் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுவின் விசேட கூட்டம் எதிர் வரும் 20ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ள கூட்டத்தில் கலந்துகொள்ளு மாறு அனைத்துக் கட்சித் தலை வர்களுக்கும் அழைப்பு விடுக்கப் பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித் துள்ளார். (அ)

# கொத்மலை ஓயாவில் இறக்கும் மீன்களை உண்ணவேண்டாம்!

கொழும்பு, ஏப். 18

கொத்மலை ஓயாவில், திடீரென மீன்கள் இறப் பதாகவும் அந்த மீனை உட்கொள்ள வேண்டாம் என நுவரெலிய மாவட்ட சுகாதார சேவை பணி மனை கோரியுள்ளது.

மீன்கள் இறக்கின்றமைக்கான காரணத்தை ஆய்வு செய்யும் வரை கொத்மலை ஓயாவின் நீரை பயன் படுத்த வேண்டாம் என மாவட்ட சுகாதார சேவை கள் பணிப்பாளர் நிஸங்க விஜேவர்த்தன அந்த பிர தேச மக்களை கோரியுள்ளார்.

கொத்மலை ஓயாவின் அம்பேவல முதல் மெராயா, எல்ஜின், அக்கரகந்தை வரையான 12 கிலோமீற்றர் நீர் பரப்பளவுக்குள் மீன்கள் உயிரிழந்துள்ளன.

இந்த ஆய்வு பணிகளுக்காக விந்துலை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதார பரி சோதகர்கள் சம்பவ இடத்துக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# உயிருக்கு போராடும் யானைக்கு வனஜீவராசி பிரிவினர் சிகிச்சை!

முல்லைத்தீவு, ஏப். 18

முல்லைத்தீவில் காயங்களுடன் உயிருக்குப் போராடி வரும் யானைக்கு நேற்று முதல் வனஜீவராசிகள் திணைக்களம் சிகிச்சை அளிக்க ஆரம்பித்துள்ளது.



ஒட்டுசுட்டான் - மணவா ளன்பட்டமுறிப்பு - கோணக் குளம் பகுதியில் கால்களில் காயங்களுடன் குளக்கரை பகு தியில் யானை ஒன்று உயிருக்கு போராடுவதாக மக்கள் வனஜீ வராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்தனர். ஆனால், வனஜீ வராசிகள் திணைக்களம் 3 நாட்களுக்கும் மேலாக அப்ப குதிக்கு செல்லவில்லை. இந்த நிலையில், இராணுவத்தினர் யானையை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தனர்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் மாலை முதல் யானைக்கான சிகிச்சைகளை அங்கு சென்ற வனஜீவராசிகள் திணைக்கள மருத்துவர் வழங்க ஆரம்பித்தார். அத்துடன், அந்த யானைக்கு உணவும் அளிக் கப்பட்டு வருகின்றது.

இதேசமயம், வடக்கு மாகாணத்துக்கு ஒரேயொரு மருத்துவரே இருக்கிறார் என்றும் இதனாலேயே சிகிச்சையளிப்பது தாமதமானதா கவும் வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 18

நீண்டகாலமாக கொக்கு வில் பகுதியில் கஞ்சா வியாபா ரத்தில் ஈடுபட்டு வந்த சந்தேகந பரை பொலிஸ் புலனாய்வு பிரி வினர் நேற்று கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் 35 வயதுடையவர் என்றும் அதே இடத்தை சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட் டார். அத்துடன், அவரிடம் இருந்து ஒரு தொகை கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்க எடுக்கப்படுவதாக பொலிஸ் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர். (ஐ-03)

# சூடான் இராணுவ மோதல்: இந்தியர் உட்பட 50 பேர் பலி; எகிப்து படையினர் சிறை பிடிப்பு!




ஜெய்நப் முகமது சலி

சூடானில் ராணுவம் - துணை ராணுவம் இடையே எழுந்த அதிகாரப் போட்டி பெரும் மோதலாக வெடித்துள்ளது. இதில், இந்தியர் ஒருவர் உட்பட 50-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலைநகர் கார்டோமில் அதிபர் மாளிகை, அரசு தொலைக்காட்சி மற்றும் ராணுவ தலைமையகத்தைப் பிடிக்க இரு தரப்பும் கடுமையாக சண்டையிட்டுக் கொண்டுள்ளன.

தலைநகரில் மட்டும் 17 பொதுமக்கள் உள்பட 55 பேர் உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ராணுவ ஆட்சியைக் கைவிட்டு ஜனநாயகத்திற்கு திரும்பலாம் என்ற முன்மொழிவே இந்த மோதலுக்குக் காரணம்.

இரவு முழுவதும் சண்டை நீடித்த நிலையில், கார்டோம் நகரில் விமான நிலையம் உள்ளிட்ட முக்கியமான இடங்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக ராணுவம், அதற்கு எதிராக போரிடும் துரித உதவிப் படைகள் ஆகிய இரு தரப்புமே கூறுகின்றன.

### தலைநகருக்கு வெளியேயும் விரியும் சண்டை

தலைநகர் கார்டோமிற்கு அருகில் உள்ள ஒம்துர்மான், பாஹ்ரி ஆகிய நகரங்களிலும் ஞாயிற்றுக்கிழமை காலையில் கடும் சண்டை நடப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. செங்கடல் துறைமுகமான போர்ட் சூடானிலும் துப்பாக்கிச் சண்டை நடந்ததாக நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர்.

துணை ராணுவப் படைத் தளங்கள் மீது போர் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியதாக ராணுவம் தெரிவித்துள்ளது. சனிக்கிழமை இரவில் துணை ராணுவப் படைகளின் நடமாட்டத்தை கண்காணித்துக் கொண்டிருந்த விமானப்படை, பொதுமக்கள் வீட்டிற்குள்ளேயே இருக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

ராணுவம் - துணை ராணுவப்படைகள் சண்டையால் பீதியடைந்துள்ள கார்டோம் நகரவாசிகள் பேசுகையில், அருகில் உள்ள வீட்டின் மீதே துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்ததாக தெரிவித்தனர்.

சூடான் முழுவதும் ஆங்காங்கே நீடிக்கும் இந்த சண்டையில் அப்பாவி பொதுமக்கள் குறைந்தது 56 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று மருத்துவர்கள் குழு தெரிவித்துள்ளது. ராணுவத்தைச் சேர்ந்த பலரும் உயிரிழந்திருப்பதாகக் கூறும் மருத்துவர்கள் குழு, பலருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளது.

மொத்தத்தில் 595 பேர் காயமடைந்திருக்கலாம் என்றும் அந்த குழு கூறியுள்ளது.

காப்கபியா தளத்தில் ராணுவம் - துணை ராணுவப் படைகள் இடையே மூண்ட மோதலில் ஐ.நா. துணை அமைப்பான உலக உணவுத் திட்டப் பணியாளர்கள் 3 பேர் கொல்லப்பட்டனர். அவர்கள், சூடானில் வறுமையால் வாடும் மக்களுக்கு உணவுப்பொருட்களை அளிப்பதற்கான பணியில் ஈடுபட்டிருந்தவர்கள்.

### இந்தியர் ஒருவர் பலி

சூடானில் ராணுவம் - துணை ராணுவப் படைகள் இடையே வெடித்துள்ள மோதலில் இந்தியர் ஒருவரும் கொல்லப்பட்டிருக்கிறார். சூடானில் டால் குரூப் என்ற நிறுவனத்தில் பணிபுரிந்த ஆல்பர்ட் அகஸ்டின் என்ற இந்தியர் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து உயிரிழந்திருப்பதை இந்திய தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தியர் கொல்லப்பட்டது குறித்து வருத்தம் தெரிவித்துள்ள வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், அவரது குடும்பத்துடன் இந்திய தூதரகம் தொடர்பில் இருப்பதாகவும், தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்றும் கூறியுள்ளார்.

### சண்டையை நிறுத்த ஐ.நா., உலக நாடுகள் வலியுறுத்தல்

சூடானில் 2021-ம் ஆண்டு அக்டோபரில் ஏற்பட்ட ராணுவப் புரட்சிக்குப் பின்னர் ராணுவ ஜெனரல்களே ஆட்சி நடத்தி வந்தனர்.

ராணுவ ஆட்சியாளரான ஜெனரல் அப்டெல் பட்டா அல்-புர்ஹானுக்கு விசுவாசமான ராணுவப் படைகளுக்கும், துணைத் தலைவராக செயல்பட்ட முகமது ஹம்தான் டெகலோ ஆதரவு துணை ராணுவப் படைகளுக்கும் இடையே தற்போது சண்டை நடக்கிறது.

அனைத்து ராணுவத் தளங்களையும் கைப்பற்றும் வரை சண்டை நீடிக்கும் என்று ஹெமிடிட் என்று அழைக்கப்படும் முகமது ஹம்தான் டெகலோ உறுதிபடக் கூறியுள்ளார்.

ராணுவத் தரப்போ, துரித உதவிப் படைகள் என்ற துணை ராணுவப்படை முற்றிலுமாக கலைக்கப்படும் வரை பேச்சுவார்த்தையே கிடையாது என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் சண்டையை உடனே நிறுத்துமாறு இரு தரப்புகளையும் கேட்டுக் கொண்டுள்ளன. இரு தரப்பு தலைவர்களையும் தொடர்பு கொண்டு மோதலை முடிவுக்குக் கொண்டு



வருமாறு ஐ.நா. பொதுச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### எகிப்து ராணுவத்தினரை சிறைபிடித்த துணை ராணுவப் படை

அதிபர் மாளிகை, ராணுவ தளபதியின் இல்லம், 3 விமான நிலையங்கள் தங்களது கட்டுப்பாட்டில் இருப்பதாக துணை ராணுவப் படைகள் தெரிவித்துள்ளன. ஆனால் அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு ராணுவ ஆட்சியாளர் ஜெனரல் புர்ஹான் அளித்துள்ள நேர்காணலில் இதனை மறுத்துள்ளார்.

அரசுத் தொலைக்காட்சி நிலையத்திலும் சண்டை நடந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்த அலுவலகம் தற்போது துணை ராணுவப் படை கட்டுப்பாட்டில் சென்றுவிட்டதாக சண்டையை நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

முன்னதாக, கார்டோம் நகருக்குத் தெற்கே தங்களது ஒரு தளம் தாக்குதலுக்கு இலக்கானதாக துணை ராணுவப் படைகள் தெரிவித்திருந்தன. துணை ராணுவப் படைகள் மீது ராணுவம் விமான தாக்குதல் நடத்துவதாக நேரில் பார்த்தவர்கள் கூறியதன் அடிப்படையில் ராய்ட்டர்ஸ் நிறுவனம் செய்தி வெளியிட்டிருந்தது.

துணை ராணுவப் படையினர் ராணுவ முகாம்களை தாக்கியதோடு, ராணுவ தலைமையகத்தையும் கைப்பற்ற முயன்றதாக ராணுவம் தெரிவித்துள்ளது.

“ஆங்காங்கே சண்டை நீடிக்கிறது. நாட்டைப் பாதுகாக்கும் கடமையை ராணுவத்தினர் ஆற்றி வருகின்றனர்” என்று ராணுவ செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் நாபில் அப்துல்லா கூறியதாக ஏ.எஃப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சூடானில் வடக்கேயுள்ள மெரோவெ நகரிலும் துப்பாக்கிச் சண்டை நடப்பதாக நேரில் கண்டவர்களை மேற்கோள் காட்டி ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

மெரோவெ நகரில் எகிப்திய துருப்புகள் சரணடையும் வீடியோவை துணை ராணுவப் படைகள் வெளியிட்டுள்ளன. சூடான் ராணுவத்தினருடன் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடச் சென்ற தனது படை வீரர்கள், தற்போதைய புதிய சூழலில் தங்களது பாதுகாப்பை உத்தரவாதப்படுத்திக் கொள்ள சூடான் அதிகாரிகளுடன் ஒத்துழைத்து வருவதாக எகிப்து ராணுவம் தெரிவித்துள்ளது.

### சூடானில் திடீர் சண்டை ஏன்?

2021-ம் ஆண்டு ஆட்சியைக் கவிழ்த்த ராணுவ தளபதிகள் ஒருங்கிணைந்து இறையாண்மை கவுன்சில் என்ற பெயரில் குழு அமைத்து ஆட்சி நடத்துகின்றனர். அதன் தலைவராக ஜெனரல் புர்ஹானும், துணைத் தலைவராக ஹெமெடியும் இருக்கின்றனர்.

சூடானில் மீண்டும் ஜனநாயக ஆட்சிக்குத் திரும்புவதற்கான முன்மொழிவுப்படி, ராணுவத்துடன் துணை ராணுவப் படைகளை எப்போது இணைப்பது என்பதில் தான் மோதல் வெடித்துள்ளது. இதனை 2 ஆண்டுகளில் செய்து முடிக்க வேண்டும் என்று ராணுவமும், 10 ஆண்டுகள் தாமதிக்க வேண்டும் என்று துணை ராணுவப் படைகளும் கூறுகின்றன.

2003-ம் ஆண்டு டார்புர் நகரில் தொடங்கி பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழக்கக் காரணமான சண்டையில் ஹெமிடிக்கு பிரதான பங்கு உண்டு.

இருதரப்பும் சண்டையைக் கைவிட்டு ஜனநாயக ஆட்சியை மீண்டும் மலரச் செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை தொடங்க வேண்டும் என்று மேற்கத்திய வல்லரசுகளும், ஆப்ரிக்க பிராந்திய தலைவர்களும் வலியுறுத்தியுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமையன்று பிரச்னை தீர்ந்து போவதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

ராணுவமும் ஜனநாயகத் தலைவர்களும் கூட்டாக அதிகாரங்களை பகிர்ந்து கொண்ட 2 ஆண்டு கால ஆட்சியை 2021-ம் ஆண்டு ராணுவப் புரட்சி முடிவுக்குக் கொண்டு வந்தது. சூடானை நீண்ட காலம் ஆட்சிபுரிந்த சர்வாதிகாரி அதிபர் ஓமர் அல் பஷிர் ஆட்சி தூக்கியெறியப்பட்ட பிறகு அவ்வாறான உடன்படிக்கை ஏற்பட்டிருந்தது.

2021 புரட்சிக்குப் பின்னர் தலைநகர் கார்டாமில் ஜனநாயகத்திற்கு ஆதரவாக மக்கள் வீதியில் இறங்கிப் போராடுவது வாடிக்கையாக மாறிவிட்டிருந்தது.

(பிபிசி)

# மேலும் ஒரு கோவிலுக்கு ஆபத்து?







**நிலாந்தன்**

கடந்த திங்கட்கிழமை பங்குனித் திங்களன்று நெடுங்கேணியில் உள்ள நொச்சிக்குளம் அம்மன் கோவிலை வழிபடச் சென்ற பக்தர்களைத் தொல்லியல் திணைக்களம் தடுத்து நிறுத்தியதாக செய்திகள் வெளியாகின. பக்தர்களைப் பொறுத்தவரை அது கோவில். தொல்லியல் திணைக்களமோ அதை ஒரு தொல்லியல் அமைவிடமாக கருதுகிறது. நாட்டின் தொல்லியல் சட்டங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும் இறுக்கமானவை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுகிறார்.

ஒரு மக்கள் கூட்டத்தால் தொடர்ச்சியாக வழிபடப்படும் ஒரிடத்தை தொல்லியல் திணைக்களம் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது என்றால் முதலில் அந்த வழிபாட்டிடத்தை நிர்வகிக்கும் தனிநபர் அல்லது நிர்வாக கட்டமைப்பிடம் அனுமதி பெறப்பட வேண்டும் என்று துறைசார் வல்லுனர்கள் கூறுகிறார்கள். அழிவடையும் நிலையில் உள்ள ஒரு மரபுரிமை சின்னத்தை தொல்லியல் திணைக்களம் பொறுப்பேற்பது வேறு, மக்களால் தொடர்ந்து வழிபடப்படும் ஓரிடத்தை பொறுப்பெடுப்பது வேறு என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

பொலநறுவையில் காணப்படும் பாழடைந்த பல சிவாலயங்களில் இரண்டாவது சிவனாலயம் என்று அழைக்கப்படுவது இப்பொழுது பக்தர்களால் வழிபடப்படுகிறது. அதற்கு பொறுப்பாக ஒரு சிங்கள பூசாரி இருக்கிறார். தமிழ் சிங்கள பக்தர்கள் அங்கே போவதுண்டு. அது தொல்லியல் விதிகளுக்கு முரணானது என்றாலும் அங்கே ஒரு நெகிழ்ச்சிப் போக்கு கடைப்பிடிக்கப்படுகிறது என்பதையும் துறைசார் புலமையாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஒரு மக்கள் கூட்டத்தின் வழிபாட்டு உரிமையும் தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரமும் முட்டும் இடங்கள் இவை.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை தொல்லியல் திணைக்களத்தை தமிழ் மக்கள் ஒரு நட்பான திணைக்களமாகப் பார்க்கவில்லை. தமிழ் மரபுரிமைச் சொத்துக்களை தொல்லியல் திணைக்களம் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது என்பது சிங்கள பௌத்த மயமாக்கலின் ஒரு பகுதி என்று தமிழ் மக்கள் சந்தேகிக்கின்றார்கள். குருந்தூர் மலையிலும் வெடுக்குநாறி மலையிலும் விவகாரம் அப்படித்தான் காணப்படுகிறது. கன்னியா வெந்நீர் ஊற்றிலும் நெடுந்தீவில் வெடியரசன் கோட்டையிலும் நிலைமை அப்படித்தான்.

தொல்லியல் திணைக்களத்தால் பராமரிக்கப்படும் சிதைந்த அல்லது சிதைந்து செல்லும் ஒரு மரபுரிமைச் சொத்தை பக்தர்கள் அணுகும் பொழுது அங்கே துறைசார் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற வரையறைகள் இருப்பது நியாயமானது. ஆனால் இலங்கைத்தீவில் நிலைமை அவ்வாறல்ல. தமிழ் மக்கள், தொல்லியல் திணைக்களத்தை சிங்களபௌத்த மயமாக்கலின் கருவியாகவே பார்க்கிறார்கள்.

கலாநிதி யூட் பெர்னாண்டோ, பேராசிரியர் நிரா விக்கிரமசிங்க போன்ற சிங்கள புலமையாளர்களே இலங்கைத்தீவின் தொல்லியல் துறையைக் கடுமையாக விமர்சித்துள்ளார்கள். கலாநிதி யூட் பெர்னாண்டோ "மரபுரிமையும் தேசிய வாதமும் - சிறீலங்காவின் விஷம்" என்ற தலைப்பில் 2015 மார்ச் மாதம் "கொழும்பு ரெலிகிராப்"பில் மிக விரிவான ஒரு கட்டுரையை எழுதியுள்ளார்.

தொல்லியல் திணைக்களம் மட்டுமல்ல மத்திய அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்வரும் எல்லாத் திணைக்களங்களுமே சிங்கள பௌத்த அரசுக் கொள்கையின் உபகரணங்கள்தான். முப்படைகளும் உட்பட நீதிபரிபாலனக் கட்டமைப்பு, போலீஸ் திணைக்களம் உட்பட அரசுத் திணைக்களங்கள் அனைத்தும் அரசின் உபகரணங்கள்தான். அரசின் கொள்கை எதுவோ அதை அவை அமுல்படுத்தும். அவற்றுக்கெல்லாம் சுயாதீனம் இருப்பதாக கற்பிக்கப்படுவது ஒரு மாயை. எனவே அரசுக் கொள்கை எதுவோ அதைத்தான் அரச உபகரணங்கள் முன்னெடுக்கும். இப்பொழுது விடயம் தெளிவாக தெரிகிறது அல்லவா?அரசின் கொள்கை சிங்கள பௌத்த மயமாக்கல் என்றால் திணைக்களங்கள் அதைத்தான் அமுல்படுத்தும்.

நாடு ஐ.எம்.எப்பின் நிபந்தனைகளுக்கு உட்பட்டதன் விளைவாக சிங்களமக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக்கூடிய அதிருப்தி, கோபம் என்பவற்றைத் திசை திருப்புவதற்கு தமிழ்மக்கள் மீதான தொல்லியல் ஆக்கிரமிப்பை தூண்டி விட்டால் போதும். சிங்களப் பொதுஜனத்தின் கோபத்தை இலகுவாகத் திசைதிருப்பலாம். அரசாங்கத்தின் இந்தக் கொள்கையின் விளைவாகத்தான் அண்மைக்காலமாக தமிழ் மக்களின் வழிபாட்டுரிமை, மரபுரிமை போன்றன தீவிரமாக கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றன. அதற்கு எதிராகத் தமிழ் மக்கள் ஆங்காங்கே எதிர்ப்பைக் காட்டி வருகிறார்கள்.

உலகில் பெரும்பாலான நாடுகளில் தொல்லியல் துறை எனப்படுவது தனது நாட்டின் பெருமைமிகு மரபுரிமைச் சொத்துக்கள் என்று கருதப்படும் இடங்களை பாதுகாக்கின்றது. அதனை அவர்கள் இனரீதியாகவோ மதரீதியாகவோ பார்ப்பதில்லை. பதிலாக அதைத் தமது நாட்டின் மரபுரிமைச் சொத்து என்றுதான் பார்க்கிறார்கள். அந்த அடிப்படையில் அதைப் பாதுகாக்கின்றார்கள் என்பதனை வரலாற்று அறிஞர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

உதாரணமாக இந்திய நாகரீகத்தின் தொட்டில்களில் ஒன்றாகக் கருதப்படும் மொகஞ்சதாரோ ஹரப்பா பாகிஸ்தானின் எல்லைக்குள்தான் உண்டு. ஆனால் இஸ்லாமிய நாடாகிய பாகிஸ்தான் அந்த அகழ்வாராய்ச்சிப் பிரதேசத்தை தனது மரபுரிமை சொத்தாகப் பேணிப் பாதுகாக்கின்றது. உலகின் மிகப்பெரிய முஸ்லிம் சனத்தொகை இந்தோனேசியாவில் உண்டு. அங்கே காணப்படும் மிகப்பெரிய புத்தர் சிலைகளை அங்குள்ள இஸ்லாமிய அரசு பாதுகாக்கின்றது.

ஆனால் இலங்கைத் தீவிலோ தொல்லியல் துறை எனப்படுவது ஆப்கானின் தாலிபான்களைப் போல செயல்படுகின்றதா என்ற கேள்வி தமிழர்கள் மத்தியில் உண்டு. ஆப்கானில் உள்ள பிரம்மாண்டமான புத்தர் சிலைகளை தாலிபான்கள் சேதப்படுத்தியதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இலங்கைத் தீவின் அரசாட்சி பாரம்பரியத்தைப் பொறுத்தவரை இது ஒரு வழமைதான். 2009க்குமுன் அரச படைகள் சிங்களமயமாக்கலை போர் என்ற வடிவத்தில் முன்னெடுத்தன. 2009க்குப்பின் திணைக்களங்கள் அதனை வேறுவடிவத்தில் முன்னெடுக்கின்றன. அவ்வளவுதான் வித்தியாசம். சிங்கள பௌத்த மயமாக்கல் 2009க்கு முன்பு முழு வேகத்தில் இடம்பெற முடியவில்லை. ஏனென்றால் போர் இருந்தது. ஆனால் இப்பொழுது முழு நாடுமே வெற்றி கொள்ளப்பட்ட நிலம். எனவே எங்கெல்லாம் சிங்கள பௌத்த மயமாக்கலைச் செய்யலாமோ அங்கெல்லாம் செய்யலாம். திணைக்களங்கள் மட்டுமல்ல, மாகாண ஆளுநர்களை வைத்தும் செய்யலாம். மாகாண நிர்வாகம் இயங்காத ஓர் அரசியற் சூழலில்,உள்ளூராட்சி சபைகள் இயங்காத ஓர் அரசியற் சூழலில், சிங்கள பௌத்த மயமாக்கலை இலகுவாக முன்னெடுக்கலாம். அதுதான் இப்பொழுது நடக்கிறது.

**தனது செல்வாக்கு மண்டலத்தில் நிரந்தரமாகத் தரித்து நிற்க எத்தனிக்கும் சீனாவை அகற்றுவதற்கு இந்தியாவுக்கு தமிழ் மக்கள் தேவை. அதேபோல சிங்கள பௌத்த மயமாக்கலை தடுப்பதற்கு தமிழ் மக்களுக்கு இந்தியா தேவை.**

இந்த சிங்களபௌத்த மயமாக்கலைத் தடுப்பதற்கு தமிழ்மக்கள் மத்தியில் வலிமையான எதிர்ப்பு இல்லை. தமிழ்மக்கள் காட்டி வரும் எதிர்ப்புக்கள் அதைத் தடுக்க போதுமானவை அல்ல. அவ்வாறு எதிர்க்க முடியாத ஒரு சூழலில், அல்லது எதிர்ப்பைக் காட்டவல்ல வலிமையான கட்சிகளின் கூட்டோ மக்கள் இயக்கமோ இல்லாத ஒரு வெற்றிடத்தில், தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் இந்தியாவைத் தஞ்சம் அடைகின்றார்கள். இந்துக்களின் மரபுரிமைச் சின்னங்கள் அழிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி பாரதிய ஜனதா அரசாங்கத்தின் பாதுகாப்பைப் பெற முயற்சிக்கின்றார்கள்.

இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதாக் கட்சி இந்த விடயத்தில் இதுவரையிலும் உத்தியோகபூர்வமாக கருத்து தெரிவித்ததாக தெரியவில்லை. இந்திய அரசாங்கத்தின் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இரு நாடுகளுக்குமிடையிலான உறவு பொறுத்து "தண்ணீரைவிட ரத்தம் அடர்த்தியானது" என்று கூறுகிறார். இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவரான மிலிந்த மொறகொட சிங்களபௌத்த பாரம்பரியத்திற்கும் இந்தியாவுக்கும் இடையிலே எப்படிப் பிணைப்புகளை ஏற்படுத்தலாம் என்று சிந்தித்து உழைக்கிறார். அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்பு சார் உறவுகள் என்று பார்த்தால், இந்த விடயத்தில் சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்புக்கும் இந்திய அரசுக் கட்டமைப்புக்கும் இடையே ஒப்பீட்டளவில் நெருக்கமும் இடையூடாட்டமும் அதிகம்.

அவ்வாறான கட்டமைப்புசார் உறவுகள் தமிழ் மக்களுக்கு இல்லை. இந்த வெற்றிடத்தில்தான் தமிழ்மக்கள் நாட்டுக்குள்ளேயும் நாட்டுக்கு வெளியேயும் உதிரிகளாக பாரதிய ஜனதா அரசாங்கத்தை அணுகி வருகிறார்கள். ஆனால் இந்த அணுகுமுறையின் விளைவாக இதுவரையிலும் இந்தியா தமிழ் மக்களுக்கு பரிந்துரைக்கும் தீர்வு 13வது திருத்தத்தை கடக்கவில்லை. 13 வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துமாறு இலங்கை மீது நிர்ணயகரமான விதங்களில் அழுத்தத்தை பிரயோகிக்கவும் இந்தியாவால் முடியவில்லை. கடந்த சில தசாப்தங்களாக இலங்கை பொறுத்து இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தோல்வியடைந்து விட்டது என்பதே நடைமுறை உண்மையாகும். அம்பாந்தோட்டையில் சீனா 99 ஆண்டு கால குத்தகைக்கு குந்தியிருக்கின்றது. கொழும்புத் துறைமுகத்தில் சீனப் பட்டினம் சீனாவின் செல்வாக்குக்குள்தான் இருக்கும். இது இந்தியாவின் செல்வாக்கு மண்டலம். இந்த மண்டலத்துக்குள் ஒரு வெளிப் பேரரசு இப்படி நிரந்தரமாக வந்து குந்தியது என்பது இந்திய வெளியுறவு அணுகுமுறைகளின் தோல்விதான். இப்படிப்பட்டதோர் வெளியுறவுச் சூழலில் இந்துத் தமிழர்களை இந்தியா காக்க வேண்டும் என்று கேட்கும் குரல் அண்மை காலங்களில் வலிமையடைந்து வருகிறது.

தமிழ் மக்கள் மிக நீண்ட கடல் எல்லையைக் கொண்டவர்கள். தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்ற சக்திகள் அக்கடல் எல்லையின் மீது ஆதிக்கம் செலுத்த முடியும். தனது செல்வாக்கு மண்டலத்தில் நிரந்தரமாகத் தரித்து நிற்க எத்தனிக்கும் சீனாவை அகற்றுவதற்கு இந்தியாவுக்கு தமிழ் மக்கள் தேவை. அதேபோல சிங்கள பௌத்த மயமாக்கலை தடுப்பதற்கு தமிழ் மக்களுக்கு இந்தியா தேவை. ராஜதந்திரம் எனப்படுவது தேவைகளின் கலைதான். நீதி நியாயத்தின் கலை அல்ல.

ஒரு வரலாற்று அறிஞர் சுட்டிக்காட்டியது போல, பாபர் மசூதியை உடைத்த ஒரு கட்சியிடம் உடைக்கப்படும் சிவனாலயங்களுக்காக நீதி கேட்பதில் அறநெறி சார்ந்த முரண் உண்டு. ஆனால் ராஜதந்திரத்தில் அறமெல்லாம் கிடையாது. நீதி நியாயங்கள் கிடையாது. நலன்சார் உறவுகளுக்கு இடையிலான பேரம்தான் உண்டு. நீதிமான்களிடந்தான் தமிழ்மக்கள் நீதியைக் கேட்கலாம் என்றால் இந்தக் கேடுகெட்ட பூமியில் தமிழ்மக்கள் யாரிடமும் நீதியைக் கேட்க முடியாது. எனவே இந்தியாவோடு தமிழ்மக்கள் பரஸ்பரம் நலன் சார்ந்த ஒரு புரிந்துணர்வுக்கு போக வேண்டும். இந்தியாவின் பாதுகாப்பு வியூகத்தில் தமிழ் மக்கள் எப்படிப் பங்காளிகள் ஆவது என்று சிந்திக்க வேண்டும். அதற்கு தமிழ் கட்சிகளிடம் பொருத்தமான வெளியுறவுத் தரிசனங்கள் இருக்கவேண்டும். வெளியுறவுக் கட்டமைப்புகள் இருக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் உணவு தவிர்ப்புப் போராட்டம் அவசியம். அதேயளவுக்கு அவசியம் பொருத்தமான வெளியுறவுக் கூட்டுக்கள்.



# ‘அரசு ஆட்சி அதிகாரம்’ நூல் வெளியீட்டு விழா!

கிளிநொச்சி, ஏப். 18

அருட்தந்தை லூக் ஜோன் எழுதிய ‘அரசு ஆட்சி அதிகாரம்’ நூல் வெளியீடு, கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

அருட்தந்தை தேவகுணாநந்தன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில்ஆசியுரையை தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாணம் பேராயர் கலாநிதி பத்மதயாளன், நூல் அறிமுக உரையை கலாநிதி ரி. எஸ். யோசுவா, நூல் ஆய்வு ரையை பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம், அருட்தந்தை எம். யூட்சுதர்சன் ஆகியோர் வழங்கினர்.

நூலின் முதற்பிரதியை பேராசிரியர் ஏ. சி. தவரஞ்சித் பெற்றுக்கொண்டார்.

தற்போதைய இலங்கை அரசியலையும் இனத்துக்குள் நடக்கும் அடிப்படைவாதங்கள், ஒடுக்குமுறைகள் தொடர்பில் ஒப்பிட்டு ஆய்வு செய்வதாக இந்த நூல் அமைந்துள்ளது.

(ஐ)

# மகிந்த ராஜபக்ஷவுக்கு நிகரான தலைமைத்துவம் நாட்டில் இல்லை!

## பொதுஜன பெரமுன சொல்கிறது

கொழும்பு, ஏப். 18

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை முன்னிலைப்படுத்தி அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடுவோம். மகிந்த ராஜபக்ஷவுக்கு நிகரான அரசியல் தலைமைத்துவம் நாட்டில் இல்லை என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

நேற்று அவரின் கட்சித் தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுள்ளதால் மாத்திரம் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை 16 தடவைகள் பெற்றுக்கொண் டுள்ள பின்னணியில் வங்கு ரோத்து நிலை அடைந்துள்ளோம்.

வெளிநாட்டு கடன்களை பெற்று அதனை முறையாக செயற்படுத்தாத காரணத்தினால் அரசமுறை கடன்கள் பொருளாதார பாதிப்பை மேலும் வலுப்படுத்தியது. 2005 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு கடன்கள் முறையான முதலீடுகளுக்காக பயன்படுத்தப்பட்டன.

நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு மாத்திரம் பொருளாதார நெருக்கடிக்கு இறுதி தீர்வாக அமையாது. நிலையான மாற்றத்துக்கான கொள்கை திட்டம் பொதுஜன பெரமுன வசம் உள்ளது. கட்சியின் கொள்கையை அடிப்படையாக கொண்டு செயல்படுவோம்.

ஜனநாயகம்,பொருளாதார மேம்பாடு ஆகிய காரணிகளை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிபந்தனையற்ற வகையில் கட்சி என்ற ரீதியில் ஆதரவு வழங்குகிறோம். ஜனாதிபதிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் நல்லிணக்கப்பாடு காணப்படுகிறது.

நாட்டு நலனுக்காக அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம். மறுபுறம் நாட்டுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் அப்போது எமது அதிகாரத்தை வெளிப்படுத்துவோம் என்பதை தெளிவாக குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை முன்னிலைப் படுத்தி அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடுவோம். மகிந்த ராஜபக்ஷவுக்கு நிகரான அரசியல் தலைமைத்துவம் நாட்டில் இல்லை - என்றார்.

(ஐ)

# புதிய பயங்கவராத சட்டத்தை எதிர்ப்போர் நீதிபதிகள்மீதும் நம்பிக்கையற்றவர்களாம்

## ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஏப். 18

பிரதி பொலிஸ்மா அதிபர்கள், நீதிபதிகள் மீது நம்பிக்கை அற்றவர்களே புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை எதிர்க்கின்றனர். அவ்வாறான வர்கள் தமக்கு இந்த சட்ட மூலம் வேண்டாம் என்றும் தாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமீது மாத்திரமே நம்பிக்கை கொண்டுள்ளதாக வும் பாராளுமன்றத்தில் அறிவிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பான புரிதல் அற்றவர்களே அதனை எதிர்க்கின்றனர். பயங்கரவாத ஒழிப்பு சட்ட மூலம் 1979ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்டது.

அந்த சட்டம் இன்றும் நடைமுறையிலுள்ளது. அதனுடன் ஒப்பிடுகையில் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. புதிய சட்ட மூலத்தில் பல தளர்வுகள் செய்யப்பட்டுள்ளன.

தடுப்புக்காவலில் வைப்பதற்கான அதிகாரம் இதற்கு முன்னர் ஜனாதிபதியிடம் மாத்திரமே காணப்பட்டது. எனினும், புதிய சட்ட மூலத்தின் ஊடாக அந்த அதிகாரம் பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கும் நீதிபதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பிரதி பொலிஸ்மா அதிபர்கள், நீதிபதிகள் மீது நம்பிக்கை அற்றவர்களே இதனை எதிர்க்கின்றனர்.

அவ்வாறெனில், அவர்கள் ஜனாதிபதியிடம் மாத்திரம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமையை விரும்புகின்றனரா? ஜனாதிபதிமீது மாத்திரமே தமக்கு நம்பிக்கை இருப்பதாகக் கூறுபவர்கள் 25ஆம் திகதி பாராளுமன்றத்தில் அதனை குறிப்பிட வேண்டும் - என்றார்.






# தென்னை மரங்களில் வெண்ணிற ஈ தாக்கம்

## 5,000 ஏக்கர் தென்னைகள் பாதிப்பு

திருமலை, ஏப். 18

**திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வெண்ணிற ஈ நோய்த் தாக்கம் காரணமாக சுமார் 5,000 ஏக்கர் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.**



கந்தளாய் பேராறு, பேராற்று வெளி வட்டுகச்சி, வான்எல, அக்போபுர அக்போகம, முள்ளிப் பொத்தானை மற்றும் தம்பலகாமம் போன்ற பகுதிகளில் இந் நோய் தாக்கம் வேகமாக பரவி வருவதாகவும் இதனால் பல தென்னந்தோட்டங்கள் அழிவடைந்து வருவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

பல்வேறு வகையான கிருமி நாசினிகள் மற்றும் மருந்துகள் தெளித்தும் இதுவரை நோய்த் தாக்கம் குறையவில்லையெனவும் விவசாயிகள் கூறினர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை அறிவித்த போதும் இதுவரை குறித்த பகுதிக்குச் சென்று பாதிப்புகளை பார்வையிடவில்லை எனவும் அப்பகுதி மக்கள் குறிப்பிட்டனர்.

எனவே, விவசாய அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தி, வெண்ணிற ஈ நோயைக் கட்டுப்படுத்தவேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)

# வாழைச்சேனையில் இப்தார்



மட்டக்களப்பு, ஏப். 18

வாழைச்சேனை அல் அக்ஸா விளையாட்டு கழகம் வருடாந்தம் நடத்தும் இப்தார் மற்றும் இராப் போசனம் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது.

வாழைச்சேனை அல் அக்ஸா விளையாட்டு கழகத்தின் தலைவரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான எஸ்.ஐ.எம். இம்தியாஸ் தலைமையில் வாழைச்சேனை அந் நூர் தேசிய பாடசாலை வளாகத்தில் இடம் பெற்ற இப்தார் நிகழ்வில் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், சட்டத்தரணிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள், கழக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# வாவியிலிருந்து மீனவர் சடலமாக மீட்கப்பட்டார்

மட்டக்களப்பு, ஏப். 18

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மைலம்பாவெளி வாவியிலிருந்து மீனவர் ஒருவரின் சடலத்தை நேற்று முன்தினம் ஏறாவூர் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்பவ இடத்திலிருந்து தமக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், வாவிக்குச் சென்ற பொலிஸார், மீனவர்களின் உதவியோடு வாவியில் மிதந்துகொண்டிருந்த சடலத்தை மீட்டனர்.

கைகள் மற்றும் கால்களின்றி உருக்குலைந்து பொருமிய நிலையில் சடலம் காணப்பட்டது.

வாவியில் உள்ள முதலை கடித்ததால்தான் சடலம் கைகள், கால்களின்றி உருக்குலைந்திருப்பதாக அங்கிருந்த மீனவர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு ஈச்சந்தீவு நாவற்காட்டைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய அமரசிங்கம் ஜெயச்சந்திரன் என்பவரே உயிரிழந்தார் என அவரது உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

குறித்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் ஈச்சந்தீவு துறையடியில் இருந்து தனது தோணியில் சென்றுள்ளார்.

எனினும், அவர் வீடு திரும்பாததால், தாங்கள் ஈச்சந்தீவை ஒட்டிய வாவியில் அவரை தேடியபோதும் கண்டுபிடிக்க முடியவில்லை. இவ்வாறான சூழ்நிலையிலேயே சடலம் மைலம்பாவெளி வாவியில் மிதப்பதாக தமக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என உயிரிழந்தவரின் உறவினர்கள் கூறினர்.

# கல்முனையில் ஐ.தே.கவின் நோன்பு திறக்கும் நிகழ்வு

அக்கரைப்பற்று, ஏப். 18

கல்முனை தொகுதி ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தர்களின் ஒன்றுகூடலும் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எச்.எச்.எம் நபாரின் அலுவலகத்தில் குறித்த நிகழ்வு நடைபெற்றதுடன் ஐக்கிய தேசிய கட்சியின் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க ஆலோசனையில் பிராந்தியத்தில் கட்சியைப் பலப்படுத்துதல் எனும் தொனிப்பொருளில் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் கட்சிக்கான ஆதரவைத் திரட்டும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# பேக்கரி உரிமையாளர் கைது!

மட்டக்களப்பு, ஏப். 18

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் இளைஞர் ஒருவருடன் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பேக்கரி உரிமையாளரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய பேக்கரி உரிமையாளர் தனது பேக்கரி வேலைக்காக திருகோணமலையில் இருந்து 20 வயதான இளைஞன் ஒருவரை அழைத்து வந்து தனது விடுதியில் தங்கவைத்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவதினமான வெள்ளிக்கிழமை இரவு அந்த பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் அவரின் நடத்தையை அவதானித்து, 119 பொலிஸ் அவசர பிரிவுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இதையடுத்து குறித்த விடுதியை சுற்றிவளைத்த பொலிஸார், பேக்கரி உரிமையாளரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்ததுடன் இளைஞனை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட நபரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அவரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டார். (அ)

# மனைவியின் கல்லறை அருகே உயிரை மாய்த்தார் கணவன்!

மட்டக்களப்பு, ஏப். 18

வந்தாறுமூலை மயானத்திலுள்ள ஈமக்கிரியைகளை நடத்தும் இளைப்பாறும் மண்டத்தில் உயிரை மாய்த்துக்கொண்ட வந்தாறுமூலை கிருஷ்ணன் கோவில் வீதியைச் சேர்ந்த 82 வயதான 7 பிள்ளைகளின் தந்தை கணபதிப்பிள்ளை தங்கராஜா என்பவரின் உடலை அந்த மயானத்திலிருந்து ஏறாவூர் பொலிஸார் மீட்டனர்.

வழமையாக சித்திரைப் புத்தாண்டு தினத்தில் மனைவியின் கல்லறையைப் பார்த்து விட்டு அங்கே அமர்ந்திருந்து மனைவிக்காக ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து விட்டு வரும் கணவன் இம்முறை மனைவியின் கல்லறையுள்ள மயானத்திலேயே உயிரை மாய்த்துக் கொண்டார் என உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, செங்கலடி-ஏறாவூர் எல்லையில் அமைந்துள்ள தனியார் கட்டடம் ஒன்றிலிருந்து உயிரை மாய்த்த 43 வயதான விஜயரத்ன வீரசிங்ஹ முதியான்சலாகே டக்ளஸ் என்பரின் சடலமொன்றையும் தாம் மீட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிமடை அம்பகஸ்வெவ, எல்லம்பலம, ஜயலகம பகுதியைச் சேர்ந்த இவர் தனியார் கம்பனி ஒன்றில் பணியாற்றி வந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல்கள் கிடைக்கப் பெற்றதன் அடிப்படையில் இவ்விரு சம்பவ இடங்களுக்கும் சென்ற பொலிஸார் சடலங்களை மீட்டுள்ளதோடு அந்தச் சம்பங்கள் குறித்த மேலதிக விசாரணைகளிலும் ஈடுபட்டுள்ளனர். (அ)

# வாழைச்சேனையில் மூவரை கடித்துக் குதறிய விசர் நாய்!

மட்டக்களப்பு, ஏப். 18

கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட ஹைறாத் வீதியில் விசர் நாயொன்றின் தொல்லையால் அவதியுறுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வீதியால் சென்ற சிறுவன் ஒருவன் உட்பட மூவரை விசர் நாய் கடித்ததில், மூவரும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.

மனித உயிர்களுக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ள விசர் நாயை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பிடித்து, அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும் என பொதுமக்கள் கோரியுள்ளனர். (அ)

# ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்தார் சீன பாதுகாப்பு அமைச்சர்!

*மொஸ்கொ, ஏப். 18*

*ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கும், சீன பாதுகாப்பு அமைச்சர் லி ஷங்புவுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.*

*ரஷ்யாவில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் பொருளாதார, அரசியல் மற்றும் இராணுவ உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டதாக வெளிநாட்டு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளுக்கு எல்லையே இல்லை என சீன பாதுகாப்பு அமைச்சர் ரஷ்ய ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.*

*இராணுவம் மற்றும் தொழில்நுட்ப தகவல் பரிமாற்றத்துக்கு ஒத்துழைக்க தனது நாடு மிகவும் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.*

*அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் லி ஷங்பு மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.*

*இதற்கு முன்னர் சீன ஜனாதிபதி ரஷ்யாவுக்கு விஜயம் செய்திருந்தார்.* (அ)

# சூடானில் போர்நிறுத்தம்!

## போராட்ட தரப்புக்கள் இணக்கம்

**கார்ட்டூம், ஏப். 18**

**சூடானில் மோதலில் ஈடுபட்டு வரும் இரண்டு தரப்பினரும் தற்காலிக போர்நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**



*இதனால் அங்கு 'அவசர மனிதாபிமான வழக்குகள்' பாதுகாப்புக்கு கொண்டு வரப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன.*

*போரை நிறுத்த ஐக்கிய நாடுகள் சபையின் முன்மொழிவுக்கு சூடான் ஆயுதப் படைகள் மற்றும் துணை இராணுவப் படையும் இணங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.*

*குறித்த இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டியில் பெரும்பாலான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*இதனிடையே, இந்த போரில் உலக உணவுத் திட்டத்தின் பணியாளர்களில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.*

*இதனையடுத்து, சூடானுக்கான பணிகளை உலக உணவுத் திட்டம் உடனடியாக இடைநிறுத்தியுள்ளது.* (அ)

# 3 அணுமின் நிலையங்களை முற்றாக மூடுகிறது ஜேர்மனி!




*பேர்ளின், ஏப். 18*

*ஜேர்மனி மூன்று அணுமின் நிலையங்களை மூடவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.*

*இதன்படி எம்ஸ்லாண்ட், நெக்கர்வெஸ்டைம் மற்றும் ஐசார் அணு உலைகள் மூடப்பட்டன.*

*ஜேர்மனியில் பல தசாப்தங்களாக த்ரீ மைல் தீவு, செர்னோபில் மற்றும் புகுஷிமாவில் ஏற்பட்ட பேரழிவுகளால் அணுசக்தி எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றன.*

*அதன் பயன்பாட்டை நிறுத்தக் கோரி அரசாங்கத்துக்கும் அழுத்தம் கொடுக்கப்பட்டது.*

*இதன் விளைவாக தற்போது மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.*

*சுற்றுச்சூழல் குழுக்கள், மூன்று உலைகளுக்கு வெளியே கொண்டாட்டங்கள் மற்றும் பேர்ளின் உட்பட முக்கிய நகரங்களில் பேரணிகளுடன் தினத்தை குறிக்க திட்டமிட்டன.*

*அணுசக்தியின் பாதுகாவலர்கள், காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான உலகளாவிய முயற்சிகளின் ஒரு பகுதியாக, புதைபடிவ எரிபொருட்கள் முதலில் படிப்படியாக அகற்றப்பட வேண்டும் என்று கூறுகின்றனர்.*

*அணுசக்தியானது மிகக் குறைவான பசுமைக்குடில் வாயு உமிழ்வை உருவாக்குகின்றமை குறிப்பிடத்தக்கது.* (அ)



# அமெரிக்காவில் துப்பாக்கிச்

## *நால்வர் உயிரிழப்பு! 28 பேர் காயம்!!*

*நியூயோர்க், ஏப். 18*

*அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தில் பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 04 பேர் உயிரிழந்துள்ளதுடன், 28 பேர் காயமடைந்துள்ளனர்.*

*துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் மற்றும் சம்பவத்திற்கு காரணமானவர் குறித்த அதிகாரப்பூர்வ தகவல்கள் வெளியிடப்படவில்லை.*

*இதனிடையே, துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர்களில் அதிகளவானவர்கள் இளம்வயதினர் என உள்ளூர் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.*

# மீண்டும் நடுங்கியது துருக்கி!




*அங்காரா, ஏப். 18*

*துருக்கி நாட்டின் அப்சின் நகரில் இருந்து 23 கி.மீ. தென்மேற்கே நேற்று அதிகாலையில் நிலநடுக்கம் பதிவானது.*

*இது ரிச்டர் அளவுகோலில் 4.0 ஆக பதிவாகி உள்ளது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.*

*நிலநடுக்கம் 10 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. இதனால் ஏற்பட்ட பொருளிழப்புகள் உள்ளிட்ட விவரங்கள் எதுவும் உடனடியாக வெளிவரவில்லை.*

*துருக்கியின் தென்கிழக்கு பகுதியில் சிரியாவின் எல்லையையொட்டி அமைந்துள்ள நகரம் காசியான்டெப். இந்த நகரத்தில் கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி அதிகாலை 4.17 மணிக்கு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.*

*காசியான்டெப் அருகே 17.9 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 7.8 ஆக பதிவானது. இதில் துருக்கி மற்றும் சிரியாவில் உள்ள பல கட்டிடங்கள் இடிந்து விழுந்தன.*

*தொடர்ந்து ரிச்டரில் 7.5 அளவிலான மற்றொரு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் பதிவானது. இதில் சிக்கி இரு நாடுகளிலும் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த நிலநடுக்கத்தில் சிறியவர்கள், பெரியவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் என அனைத்து தரப்பினரும் சிக்கி பாதிப்படைந்தனர்.* (அ)

# வடகொரியாவின் ஏவுகணை சோதனைக்கு மத்தியில் அமெரிக்கா-ஜப்பான்-தென்கொரியா கூட்டுப் பயிற்சி!

*நியூயோர்க், ஏப். 18*

கூட்டுப் பயிற்சியில் மூன்று நாடுகளின் போர் கப்பல்கள் பங்கேற்று இருக்கின்றன.

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையின் இலக்கை கண்டறிந்து கண்காணிப்பதற்கான பயிற்சி நடந்தது.

வடகொரியா-தென் கொரியா இடையே நீண்ட காலமாக பிரச்னை இருந்து வருகிறது.

இதில் மிரட்டல் விடுக்கும் வகையில் வடகொரியா அடிக்கடி ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. சமீபத்தில் தென்கொரியா-அமெரிக்கா இணைந்து போர் பயிற்சியில் ஈடுபட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தது.

வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்துகிறது. இதனால் கொரியா தீபகற்பத்தில் பதற்றம் நீடிக்கிறது.

இந்நிலையில் சர்வதேச கிழக்கு கடல் பகுதியில் அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகள் இணைந்து முத்தரப்பு கூட்டு ராணுவ பயிற்சியை தொடங்கியுள்ளது.

வடகொரியாவின் ஏவுகணை அச்சுறுத்தல்களை தடுக்கவும், அதற்கு பதிலடி கொடுக்கவும் கூட்டுப் போர் பயிற்சி நடத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுப் பயிற்சியில் மூன்று நாடுகளின் போர்க் கப்பல்கள் பங்கேற்று இருக்கின்றன. இதில் ஏவுகணை பாதுகாப்பு ஒத்திகையை நடத்தி வருகின்றன. கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவு கணையின் இலக்கை கண்டறிந்து கண்காணிப்பதற்கான பயிற்சி நடந்தது.

இது தொடர்பாக தென் கொரிய கடற்படை கூறும் போது- வடகொரியாவின் அணுசக்தி மற்றும் ஏவுகணை அச்சுறுத்தல்களுக்கு எதிராக தென்கொரியா, அமெரிக்கா, ஜப்பான் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த கூட்டு இராணுவ பயிற்சி ஒரு வாய்ப்பாகும்.

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளுக்கு பதிலடி கொடுப்பதை எங்கள் கடற்படையின் திறன்கள் உறுதிப்படுத்துகிறது-என்றது. (அ)

# பார்சிலோனா ஓப்பன் விலகினார் நடால்!

பார்சிலோனா, ஏப். 18

பார்சிலோனா ஓப்பன் டென்னிஸ் தொடரிலிருந்து காயம் காரணமாக ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் விலகியுள்ளார்.

ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் அடுத்த வாரம் பார்சிலோனா ஓப்பன் டென்னிஸ் தொடர் தொடங்கவுள்ளது. 22 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று சாதனை படைத்துள்ள ரபேல் நடால் இந்தப் போட்டியில் பங்கேற்பதாக அறிவித்திருந்தார்.

ஆனால், அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் போட்டி முதலே காயத்தால் அவதிப்பட்டு வரும் நடால், இந்தத் தொடரிலிருந்தும் விலகுவதாக அறிவித்துள்ளார்.

அவர் ஏற்கெனவே இந்தியன் வெல்ஸ், மியாமி, மொன்டி கார்லோ டென்னிஸ் தொடர்களில் இருந்தும் காயம் காரணமாக விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# குஜராத் ரைட்டன்ஸை வீழ்த்தி ராஜஸ்தான் அபார வெற்றி!

குஜராத், ஏப். 18

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் குஜராத் அணியை எதிர்கொண்ட ராஜஸ்தான் அணி 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில் குஜராத் ரைட்டன்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின. அகமதாபாத்தில் நடந்த இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

இதன்படி, முதலில் களமிறங்கிய குஜராத் அணிக்கு தொடக்க ஆட்டக்காரர் சஹா 4 ஓட்டங்களுடன் முதல் விக்கெட்டாக வெளியேறினார். அடுத்து வந்தவர்களில் சாய் சுதர்சன் 20 ஓட்டங்களிலும் ஹர்திக் பாண்டியா 28 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தாலும் ஷுப்மன் கில் 45 ஓட்டங்களை எடுத்து அணிக்கு உதவினார்.

இவருக்கு அடுத்தாக அபினவ் மனோஹர் அதிரடியாக ஆடி 13 பந்தில் 3 சிக்ஸர் உள்பட 27 ஓட்டங்களில் ஆட்டமிழக்க கடைசி கட்டத்தில் அதிரடி காட்டிய டேவிட் மில்லர் 30 பந்துகளில் 46 ஓட்டங்கள் சேர்த்து விக்கெட்டைப் பறிகொடுத்தார். இதனால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட்கள் இழப்புக்கு குஜராத் அணி 177 ஓட்டங்களை சேர்த்தது.

ராஜஸ்தான் தரப்பில் சந்தீப் சர்மா அதிகபட்சமாக 2 விக்கெட் வீழ்த்தினார்.

178 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு தொடக்கம் சிறப்பாக அமையவில்லை.

முதல் ஓவரில் இரண்டு ஓட்டங்கள் மட்டுமே எடுத்த ராஜஸ்தான் அணியின் முதல் விக்கெட்டாக ஜெய்ஸ்வாலை ஓர் ஓட்டத்துடன் நடையைக் கட்ட வைத்தார் ஹார்திக் பாண்ட்யா.

அடுத்த ஓவர் வீசிய ஷமி அதிரடி ஆட்டக்காரர் ஜோஸ் பட்லரை 'கிளீன் போல்ட்' ஆக்கினார். இதனால் 3 ஓவர்கள் முடிவில் 4 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்து தடுமாறிய ராஜஸ்தான் அணியை, அணித்தலைவர் சஞ்சு சாம்சனும், படிக்கல்லும் இணைந்து மீட்டெடுக்கப் போராடினர். ஆனால், ரஷீத் கான் அந்த எண்ணத்தை நிறைவேற்றவிடவில்லை. அவர் 26 ஓட்டங்கள் எடுத்திருந்த படிக்கல்லையும், 5 ஓட்டங்கள் எடுத்திருந்த ரியான் பராக்கையும் பெவிலியன் திரும்ப வைத்தார்.

விக்கெட்கள் சரிந்தாலும், சஞ்சு சாம்சன் சக வீரர் ஹெட்மேயருடன் இணைந்து குஜராத்தின் பந்துவீச்சை துவம்சம் செய்தார். தன் பங்குக்கு 30 பந்துகளில் 6 சிக்ஸர்களின் உதவியுடன் 60 ஓட்டங்கள் சேர்த்துவிட்டு வெளியேறினார். இறுதி ஓவர்களில் ஹெட்மேயர் சிறப்பாக விளையாடி ராஜஸ்தான் அணியை வெற்றி பாதைக்கு அழைத்துச் சென்றார். இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த ஹெட்மேயர் 5 சிக்ஸர்களுடன் 56 ஓட்டங்கள் எடுத்தார்.

இதனால் ராஜஸ்தான் அணி 4 பந்துகள் மீதமிருக்கையில் 7 விக்கெட்களை இழந்து 179 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது. இந்தத் தொடரில் ராஜஸ்தான் பெறும் 4ஆவது வெற்றி இதுவாகும்.

இதுவரை ஒரேயொரு போட்டியில் மட்டுமே அந்த அணி தோல்வி கண்டுள்ளது. குஜராத் தரப்பில் ஷமி அதிகபட்சமாக 3 விக்கெட் வீழ்த்தினார். (ஐ)

# இலங்கை பலமான நிலையில் தடுமாறுகின்றது அயர்லாந்து!

காலி, ஏப். 18

திமுத் கருணாரத்ன, குசல் மெண்டிஸை தொடர்ந்து தினேஷ் சந்திமால், சதீர சமரவிக்கிரம ஆகியோரும் சதம் அடித்ததால் இலங்கை அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 591 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் அயர்லாந்து 88 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகின்றது.

இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடுவதற்காக அயர்லாந்து அணி இலங்கை வந்துள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் காலியில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல் நாள் ஆட்டம் முடிவில், இலங்கை 4 விக்கெட்கள் இழப்புக்கு 386 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தினேஷ் சந்திமால் 18, பிரபாத் ஜெயசூர்யா 12 ஓட்டங்களுடன் நேற்று இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். பிரபாத் 16 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த தனஞ்சய டீ சில்வா 12 ஓட்டங்களுடன் மைக்பிரைன் பந்தில் எல். பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் நிதானம் காட்டிய தினேஷ் சந்திமாலுடன் இணைந்த சதீர சமரவிக்கிரம அபாரமாக ஆடினார். இருவரும் அரைச்சதம் கடந்ததைத் தொடர்ந்து சதத்தையும் தொட்டனர். தினேஷ் 10ஆவது சதமாகவும் சதீர சமரவிக்கிரமவுக்கு கன்னிச் சதமாகவும் அமைந்தது.



131 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 591 ஓட்டங்கள் எடுத்த நிலையில் இலங்கை ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. தினேஷ் சந்திமால் 102 ஓட்டங்களையும் சதீர சமரவிக்கிரம 104 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

அயர்லாந்தின் பந்துவீச்சில் கம்பெர் 2 விக்கெட்களையும் மார்க் அடைர், அன்டி மைக் பிரைன், பென் வைற், ஜோர்ஜ் டொக்ரெல் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணிக்கு ஜேம்ஸ் மைக்கொலும், முர்ரே கம்மின்ஸ் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். முர்ரே ஓட்டம் எதையும் எடுக்காமலே ஆட்டமிழந்தார். பால்பிரைன் 4 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

தொடர்ந்து மக்கொலும் 35, ஹென்றி ரெக்ரர் 34, கம்கெர் 0 என ஆட்டமிழந்தனர்.

நேற்று மாலை தேநீர் இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டபோது அயர்லாந்து 5 விக்கெட்கள் இழப்புக்கு 88 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பீற்றர் மூர் 12, லோர்கன் ரக்கர் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இலங்கையின் பந்துவீச்சில் பிரபாத் ஜெயசூரிய 3, விஸ்வா பெர்னாண்டோ 2 விக்கெட்களை எடுத்திருந்தனர். (ஐ)

# கொல்கத்தா நைற் ரைடர்ஸை வெற்றி கொண்டது மும்பை!

மும்பை, ஏப். 18

கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

16ஆவது ஐ. பி. எல். தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில், நேற்று முன்தினம் நடந்த கொல்கத்தா அணியும் மும்பை அணியும் மோதின. மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

மும்பை அணியில் அறிமுக வீரராக அர்ஜூன் டெண்டுல்கர் சேர்க்கப்பட்டார் அதேபோல அணியை சூர்யகுமார் யாதவ் வழிநடத்தினார்.

ரஹ்மானுல்லா குர்பாஸ், ஜெகதீசன் இணை கொல்கத்தாவுக்கு தொடக்கம் கொடுத்த நிலையில் ஜெகதீசன் ஓட்டம் எதுவும் எடுக்காமல் முதல் ஓவரிலேயே விக்கெட்டை இழந்தார். அடுத்து வந்த வெங்கடேஷ் ஐயர் மும்பை அணியின் பந்துகளை அடித்து விளாச மறுபுறம் வந்த வீரர்கள் யாரும் சோபிக்கவில்லை.

ரஹ்மானுல்லா குர்பாஸ் 8 ஓட்டங்களிலும் நிதிஷ் ரானா 5 ஓட்டங்களிலும் ஷர்துல் தாகூர் 13 ஓட்டங்களிலும் வெளியேறினர். 51 பந்துகளில் 9 சிக்ஸர்கள் அடித்து 104 ஓட்டங்களை சேர்த்த வெங்கடேஷ் ஐயர் விக்கெட்டாக, ரின்கு சிங்கும் 18 ஓட்டங்களுடன் கிளம்பினார்.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் கொல்கத்தா அணி 6 விக்கெட்களை இழந்து 185 ஓட்டங்களை சேர்த்தது. அந்த்ரே ரசல் 21 ஓட்டங்களுடனும், சுனில் நரைன் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மும்பை அணி தரப்பில் ஹ்ருத்திக் ஷோகீன் 2 விக்கெட்களையும், பியூஸ் சாவ்லா, கிரீன், டூவான் ஜேன்சன், ரிலே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



இதையடுத்து களமிறங்கிய மும்பை அணி பொறுப்பான தொடக்கத்தை வெளிப்படுத்தியது. ரோஹித் ஷர்மா 20 ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும் இஷான் கிஷன் 5 சிக்ஸர்களை அடித்து வாணவேடிக்கை காட்டினார். 25 பந்துகளில் 58 ஓட்டங்களை குவித்து அதிரடி காட்டிய அவரை வருண் சக்ரவர்த்தி ஆட்டமிழக்க செய்தார். அடுத்து திலக் வர்மா 30 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, சூர்யகுமார் யாதவ் 43 ஓட்டங்களைச் சேர்த்துவிட்டு பெவிலியன் திரும்பினார்.

நேஹால் வதேரா 6 ஓட்டங்களில் ஆட்டமிழக்க 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் கொல்கத்தாவை வெற்றி கொண்டது மும்பை.

கொல்கத்தா அணி தரப்பில் சுயஷ் ஷர்மா 2 விக்கெட்களையும், வருண் சக்ரவர்த்தி, ஷர்துல் தாக்கூர், லோகி பெர்குசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)

# ராஜிதவை அமைச்சராக்கினால் ரோஹிதவுக்கும் அமைச்சு பதவி!

## ஜனாதிபதியிடம் பெரமுன கோரிக்கை

கொழும்பு, ஏப். 18

**ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு அமைச்சுப் பதவி வழங்கினால், அதே மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவுக்கும் அமைச்சுப் பதவி வழங்க வேண்டுமென பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

ரோஹிதவுக்கு இல்லாமல் ராஜிதவுக்கு மாத்திரம் அமைச்சுப் பதவியை வழங்கவேண்டாம் என ஜனாதிபதியிடம் விசேட கோரிக்கை விடுத்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ரோஹித அபேகுணவர்தன கட்சியின் வளர்ச்சிக்காக அதிக அர்ப்பணிப்புகளை மேற்கொண்டவர் எனவும், இந்நிலையில் ராஜித சேனாரத்னவுக்கு அமைச்சுப் பதவி வழங்கினால் அது பாரிய அநீதி என ஜனாதிபதியிடம் பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டியுள்ளதாக தெரியவருகிறது.

ராஜித சேனாரத்ன விரைவில் புதிய அமைச்சுப் பதவியை ஏற்கத் தயாராக இருப்பதாக கடந்த சில வாரங்களாக பல்வேறு ஊடகச் செய்திகள் வெளியாகின.

இதேவேளை, அமைச்சுப் பதவிகளுக்காக பொதுஜன பெரமுனவின் பெயர்ப் பட்டியலும் கடந்த காலங்களில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# குரங்குகளை சீனாவுக்கு அனுப்ப கேகாலை விவசாயிகள் ஆதரவு!

கொழும்பு, ஏப். 18

சீனாவுக்கு அனுப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு லட்சம் குரங்குகளை தமது பகுதியில் இருந்து பிடிக்குமாறு கேகாலை மாவட்ட விவசாயிகள், அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் 8 லட்சம் பேர் வாழும் நிலையில், அங்கு ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட குரங்குகள் இருப்பதாகவும், இதனால் ஏற்படும் பாதிப்புகள் ஏராளம் எனவும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வீடுகளில் சமைத்த உணவுகளை பாத்திரத்துடன் குரங்குகள் தூக்கி செல்லும் நிலை காணப்படுவதுடன், அங்கு உணவு பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தெரியவந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே சீனாவுக்கு அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ள குரங்குகளில், பெரும்பாலானவற்றை தமது பகுதிகளில் இருந்து பிடிக்குமாறு விவசாயிகள் கோரியுள்ளனர்.

(அ)

# வவுனியா செட்டிகுளம் முகத்தான்குளம் கால்வாய் அமைக்க ரூபா 404 மில்லியன்!

வவுனியா, ஏப். 18

வவுனியா செட்டிகுளம் முகத்தான்குளம் கால்வாய் அமைப்பதற்கு 404 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- வவுனியா செட்டிகுளம் முகத்தான் குளத்தின் வயல் நிலங்களுக்கு சீரான தண்ணீர் வரத்து இல்லாமையினால் பல ஏக்கர் காணிகள் விதைக்கப்படாமல் இருந்து வருகின்றன.

சமீபத்தில் வவுனியாவில், நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர் ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்பை சரியாகப் பயன்படுத்தியதால் 404 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்தக் கால்வாய் 8 கி.மீ தூரத்துக்கு அமைக்கப்பட உள்ளது. இதனால், 950 ஏக்கர் நிலம் பயன்படும் என்று கமக்கார அமைப்பினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நீர்ப்பாசனத் திணைக்கள வவுனியா மாவட்ட பொறியியலாளர் மற்றும் உத்தியோகத்தர்களுடன் நேரில் சென்று கமக்கார அமைப்பினரைச் சந்தித்து திட்டம் தொடர்பாக தெரிவித்தோம்.

மேலும் 10 குளங்களை புனரமைப்பதற்கான அனுமதி பெற்றுக் கொண்டோம். அதற்கான நிதியும் விரைவில் கிடைக்கப் பெறும்-என்றார்.

(அ)

# கம்பளையில் நடந்த விபத்தில் அவுஸ்திரேலிய பெண் மரணம்

கொழும்பு, ஏப். 18

கண்டி மாவட்டத்துக்குட்பட்ட, கம்பளை, ஹேம்மாத்தகம வீதியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் அவுஸ்திரேலிய பெண்ணொருவர் (வயது-67) பலியாகியுள்ளார்.

ஹேமத்தகம நோக்கி பயணித்த வாகனமொன்று 12 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதிலேயே குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

விபத்தின்போது காரின் சாரதி, பாதிக்கப்பட்ட பெண் மற்றும் அவரது மகள் ஆகியோர் வாகனத்தில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மூவரும் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் பெண் உயிரிழந்துள்ளார்.

சாரதி கவனமின்மையே விபத்துக்கு காரணம் என கூறப்படுகின்றது.

(அ)

# அதிவேக நெடுஞ்சாலையில் ஞாயிறு இரவு பல விபத்துகள்!

## 26 வாகனங்கள் சேதம்!!

கொழும்பு, ஏப். 18

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் தொடங்கொட நுழைவாயிலுக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற பல விபத்துக்களில் 26 வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

காலியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த வாகனங்கள் 32 முதல் 35 கிலோமீற்றர் வரையில் இடம்பெற்ற 06 விபத்துக்களால் இந்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தெற்கு அதிவேக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்கள் காரணமாக நெடுஞ்சாலையில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் பெரும்பாலான வாகனங்களுக்கு முன் மற்றும் பின் பகுதிகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வாகனங்களுக்கு இடையே இடைவெளி விட்டு செல்லாமையினால் இந்த விபத்துகள் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



(அ)

# கோட்டா கடற்படைத்தளத்தின் புலனாய்வாளர் சடலமாக மீட்பு!

முல்லைத்தீவு, ஏப். 18

முல்லைத்தீவு கோட்டாபய கடற்படைத்தளத்தில் பணியாற்றும் கடற்படை சிப்பாய் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பதுளையைச் சேர்ந்த குறித்த கடற்படை சிப்பாய் முல்லைத்தீவு கோட்டாபய கடற்படைத்தளத்தில் புலனாய்வாளராக பணியாற்றி வந்துள்ளார்.

அவர் இரவு நித்திரைக்கு சென்ற நிலையில் நேற்று முன்தினம் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

(அ)

# வாகனங்களை பரிசோதிப்பதற்காக மேலதிக பொலிஸ் குழுக்கள் பணியில்

கொழும்பு, ஏப். 18

புதுவருடப் பிறப்பின் பின்னர் கிராமங்களிலிருந்து தலைநகர் கொழும்புக்கு திரும்பும் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயில்களில் பாதுகாப்புக்காக மேலதிக பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அதிவேக நெடுஞ்சாலைகளில் மதுபானம் அருந்தியநிலையில் பயணிக்கும் சாரதிகளைக் கைதுசெய்யும் நோக்கில் பொலிஸார் இவ்வாறு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேபோன்று, அதிவேக நெடுஞ்சாலையில் செல்ல தகுதியற்ற வாகனங்கள் மற்றும் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் நுழைய அனுமதிக்கப்போவதில்லை.

ஏனெனில் தற்போது அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

அதிவேக நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பற்ற வாகனங்கள் நுழைவதற்கு எந்தச் சந்தர்ப்பத் திலும் அனுமதிக்கப்படமாட்டாது.

அதேபோன்று அதிவேக நெடுஞ்சாலைகளினூடாக கொழும்புக்கு உள்நுழையும் பகுதிகளிலும் வெளியேறும் பகுதிகளிலும், போக்குவரத்து நெரிசல்கள் இருக்கலாம்.

எனவே அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகன சாரதிகள் நெடுஞ்சாலைக்கு உரித்தான போக்குவரத்து விதிமுறைகளை உரிய முறையில் கடைபிடிக்க வேண்டியது அவசியமாகும்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறும் வாகனங்கள் நெடுஞ்சாலையை விட்டு வெளியேறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(அ)

# இறைச்சிக்கு கொண்டு சென்ற நான்கு ஆடுகள் மீட்கப்பட்டன!

வடமராட்சி, ஏப். 18

இறைச்சிக்கு வெட்டுவதற்காகக் கொண்டு சென்ற நான்கு ஆடுகளை நெல்லியடி பொலிஸார் மீட்டுள்ளனர்.

நெல்லியடி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன் தினம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த நான்கு ஆடுகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.



துன்னாலை - குடவத்தை பகுதியில் வைத்தே இந்த ஆடுகள் மீட்கப்பட் டன. பொலிஸ் சார்ஜண்ட் எம். எஸ். எச். பி. ஜயரத்ன தலைமையிலான கான்ஸ்டபிள்களான கு. வினோத், சாருஜன், திலின உட்பட்ட பொலிஸ் அதிகாரிகள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டன.

இதேவேளை, மீட்கப்பட்ட ஆடுகள் தொடர்பில் எந்தவித முறைப்பாடுகளும் நெல்லியடி பொலிஸாருக்கு கிடைக்கவில்லை என்று தெரிவித்த பொலிஸார், ஆடுகளின் உரிமையாளர்களை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுள்ளனர்.

(ஐ-02)

# ஓரின சேர்க்கை குறித்த சட்ட வரைவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல்!

கொழும்பு, ஏப். 18

பாராளுமன்ற உறுப்பினர், சட்டத் தரணி பிரேமநாத் சி. தொலவத்தவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட் டுள்ள தண்டனைச் சட்டத் திருத்தச் சட்டவரைவு அரசமைப்புக்கு முரணா னது எனத் தீர்ப்பளிக்குமாறு உயர் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற இராணுவ பிரிகேடியர் கே. அதுல எச் டி சில்வா, ஷெனாலி டி வடுகே மற்றும் ஜெஹறான் ஹமீட் ஆகி யோர் இந்த மனுவின் மனுதாரர்களாக உள்ளனர்.

பிரதிவாதிகளாக பாராளுமன்ற உறுப் பினர் பிரேமநாத் சி. தொலவத்த மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் பெயரி டப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட உறுப்பினர் முன்மொழி வாக முன்வைக்கப்பட்ட தொடர்புடைய சட்டவரைவின் ஊடாக பிரதிவாதியான பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி. தொலவத்த ஓரினச் சேர்க்கையை குற்ற மற்ற குற்றமாக விளக்க முயற்சித்துள்ள தாக மனுதாரர்கள் கூறுகின்றனர்.

அத்துடன், இது தண்டனைச் சட்டம் தொடர்பான சட்டமன்றத்தின் எதிர் பார்ப்புகளுக்கு முரணானது என்றும், அதன் மூலம் அரசமைப்பு விதிகள் கடுமையாக மீறப்படுகின்றன என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பௌத்த, இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மத நம்பிக்கைகளின் படிகூட, ஓரினச்சேர்க்கை நடவடிக் கைகளுக்கு அனுமதி வழங்கப்பட வில்லை. எனவே உத்தேச சட்டவரை வின் விதிகள் அந்த மத நம்பிக்கைகளுக்கு முரணானது எனவும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், குறித்த சட்டவரைவால் எதிர்பார்க்கப்படும் விடயங்கள் இந்த நாட்டின் கலாசார மற்றும் தேசிய அடை யாளங்களுக்கு எதிரானவை எனவும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்மொழியப்பட்ட சட்டவரைவில் உள்ள விதிகள் அடிப்படை மனித உரிமைகளை மீறும் வகையில் இருப்ப தால், அதை நிறைவேற்ற வேண்டுமா னால், மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் மற்றும் பொதுவாக்கெடுப்பு மூலம் அதை அங்கீகரிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றில் மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

## நாளை...

- கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப் பட்ட இன, மத ஆக்கிரமிப்பு நடவடிக் கைகளை உடனடியாக தடுத்து நிறுத்தல்.

அட்டை பண்ணைகள், இறால் பண்ணைகள் அமைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் கிளிநொச்சி மற் றும் யாழ்ப்பாண மாவட்டங்களின் கடல்வள அபகரிப்பை கைவிடக் கோரல், சீன நாட்டின் முதலீட்டாளர் களுக்கு கிளிநொச்சியின் காணிகளை தாரை வார்ப்பதை தடுத்து நிறுத்தல் ஆகிய ஆறு அம்சங்களை வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## வடக்கு...

நடைபெற்ற கூட்டத்தின்போது அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய கட்சி களின் தலைவர்களுடனும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி யின் ஆதரவும் கோரப்பட்டது. போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த அந்தக் கட்சிகளின் தலை வர்கள், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தாமும் போராட்டத்தில் பங்கேற்பதாக உறுதியளித்தனர். (ஐ)

## பண்ணை...

அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற் றனர்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் பின்னர் செய்தி ளார்களுக்கு கருத்து வெளியிட்ட பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ. சரவணபவன், யாழ்ப்பாணம் வணிகர் கழக இ. ஜெயசேகரன் ஆகியோரே மேற்படி தகவல்களை வெளியிட்டனர்.

மேலும், வழக்கு விசாரணையின் போது இந்து அமைப்புகளுக்கு ஆதர வாக முன்வருமாறு சகல சட்டத்தரணி களுக்கும் இதன்போது அழைப்பு விடுக்கப்பட்டது. அத்துடன், பார்வை யாளர்களாக மக்களும் அதிகளவில் வருகை தர வேண்டும் என்றும் கோரப்பட்டது.

முன்னதாக, வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தை பிரதிபலிக்கும் விதமாக தீவகத்துக்கான பாதை ஆரம்பமாகும் பண்ணை சுற்றுவட்டத்தில் அம்மன் சிலை ஒன்று புத்தாண்டு தினத்தில் வைக்கப்பட்டது.

இந்த சிலைக்கு பால் அபிஷேகமும் செய்யப்பட்டது. இதையடுத்து, இதனை செய்த உருத்திர சேனை அமைப்பினர் மூவரை பொலிஸார் விசாரணைக்கு அழைத்து அவர்களை விசாரணையும் செய்திருந்தனர். ஆனா லும், இந்த சிலையை வைத்தவர்கள் யார் என்பது தெரிய வரவில்லை. இந்த நிலையில், இந்த சிலையை அகற்றுமாறு நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப் பட்டு அது தொடர்பான அறிவித்தலும் சிலையின் அருகே பொலிஸாரால் ஒட்டப்பட்டது. இந்த நிலையிலேயே சிலையை அகற்றுவதை ஆட்சேபிக்க இந்து அமைப்புகள் தீர்மானித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

## அமைச்சு...

வழங்க வேண்டும் என்பதை ஜனாதிபதி யிடம் வலியுறுத்தியுள்ளோம் என்று சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

சிறீ லங்கா பொதுஜன பெரமுன அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது. எமது அரசாங்கம் எடுத்த ஒருசில தவ றான தீர்மானங்களால் பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்தது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

உரம் தொடர்பில் கொள்கை மட்டத் தில் அரசாங்கம் எடுத்த தீர்மானத்தால் பல பிரச்னைகள் தோற்றம் பெற்றன. நிலையான அரசாங்கத்தை நிறுவ சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது. பொதுஜன பெரமுனவுக்கு எதிராக செயல்பட்ட வர்களுக்கு அமைப்பு பதவிகள் வழங் கப்படும்போது பொதுஜன பெரமுன வுக்கு ஆதரவாக செயற்பட்டவர்களுக்கு அமைச்சு பதவிகள் வழங்க வேண்டும்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகள் வழங்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம். 2019 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டுள் ளார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு அமைச்சு பதவி வழங்குவதற்கு கட்சி என்ற ரீதியில் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அதே போல் பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன வுக்கும் அமைச்சு பதவி வழங்க வேண் டும் என்பதில் உறுதியாக உள்ளோம் - என்றார். (ஐ)

# தமிழ்நாடு - தலைமன்னாரை சுரங்கபாதையால் இணைக்குக!

## மோடிக்கு தி. மு. க. எம். பி. கடிதம்

சென்னை, ஏப். 18

தமிழ்நாட்டையும் இலங்கையின் தலைமன்னாரையும் இணைக்கும் வகையில் கடலுக்கடியில் சுரங்கப்பாதை அமைக்க வேண்டும் என நரேந்திர மோடிக்கு தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி கடிதம் எழுதியுள்ளார்.

இந்த சுரங்கப்பாதை கடலுக்கு அடியில் தமிழ்நாட்டின் தென்பகுதி யையும் இலங்கையின் தலைமன்னாரை யும் இணைக்கும் வகையில் அமைக்கப் பட வேண்டும் என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

மேலும், பொருளாதார ரீதியில் இந்தியா, இலங்கையை சாலை மூலம் இணைப்பதன் பயன் மிகப் பெரியதா கும். இந்தியா, இலங்கையில் வாழும் மக்கள் இதன்மூலம் பெரும் நன்மை டைவார்கள் - என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஐ)

# லொறி - ஓட்டோ விபத்தில் பாடசாலை மாணவி பலி!

கொழும்பு, ஏப். 18

லொறியும் முச்சக்கரவண்டியும் மோதியதில் பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்தார் என்று மெதிரிகிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை பொலநறுவை - மெதிரிகிரிய - பிசோபுர பிரதான வீதியின் வட்டதாகேய சந்தி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் கே.எம்.சஞ்சனா சத்சரணி ஜயரத்ன என்ற 8ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவியே உயிரிழந்தார்.

நவநகர பிரதேசத்தில் பயிற்சி வகுப்புக்குச் செல்வதற்காக மாணவியும் அவரின் நண்பர்கள் இவரும் முச்சக்கர வண்டியில் பயணித்தபோதே இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# தேர்தலை கோரி வீதிக்கு இறங்குவோர் பிள்ளைகளுக்காக போராட தயாரில்லை

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஏப். 18

நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை குறுக்கு வழிகளை கடைப் பிடித்து கோஷங்களிலும் வாக்குறுதிகளி லும் மாட்டிக்கொள்வதன் மூலம் தீர்க்க முடியாது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேர்தலைக் கோரி வீதிக்கு வருபவர்கள் பிள்ளைகளின் வினாத்தாளை திருத்த வேண்டும் என்று கோரி யாரும் கிளர்ச்சி செய்யவில்லை.

பிரான்ஸில் இலங்கையர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சில அரசியல் கட்சிகள் ஜனரஞ்சக கருத்துகளை தெரிவிக்கின் றன. அவை மிகவும் கவர்ச்சிகரமானவை. எல்லோரும் கேட்க விரும்புகிறார்கள். ஆனால், அந்த யோசனைகளையும் பரிந் துரைகளையும் இந்தத் தளத்தில் செயல் படுத்த முயன்றால் சிக்கல்கள் ஏற்படும். எனவே, இத்தருணத்தில் நாம் செய்ய வேண்டியது, கோஷங்களிலும், வாக்கு றுதிகளிலும் சிக்கிக் கொள்ளாமல் அடுத்த தேர்தலுக்காக உழைக்க வேண்டும்.

உடைந்த பொருளாதாரத்தை வாக்களிக்கும் முன் சரி செய்ய வேண் டும். தேர்தலுக்கு நாங்கள் பயப்பட வில்லை. ஆனால் அதற்கு முன், மக்கள் பெறும் சம்பளத்தில் மூன்று வேளை சாப்பிடும் பொருளாதாரத்தை உரு வாக்கி தேர்தலுக்கு செல்வோம்.

நீங்கள் தேர்தலுக்காக காத்திருந்து, உங்கள் அமைச்சுகளை அரவணைத்து அரசியல் செய்தால், இந்த நாடு காணா மல் போய்விடும். இதைப் புரிந்து கொண்டு, நாட்டின் மீது அக்கறை கொண்ட, படித்த, புத்திசாலித்தனமான எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அரசின் திட் டத்திற்கு பல்வேறு வகையில் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

உயர்தர மாணவர்களின் வினாத்தாள் கள் இன்னும் திருத்தப்படவில்லை. அதனால், வழக்கமான பரீட்சையை குறித்த நேரத்தில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தேர்தலைக் கோரி வீதிக்கு வருபவர்கள் பிள்ளைகளின் வினாத்தாளை திருத்த வேண்டும் என்று கோரி யாரும் கிளர்ச்சி செய்யவில்லை. - என்றார். (ஐ)

## அரசியல்...

இவ்வாறு உயிரிழந்தார்.

குப்பிளானை சேர்ந்த அந்தப் பெண் வலி. வடக்கு பிரதேச சபையின் முன் னாள் தவிசாளரான இலங்கை தமிழரசு கட்சியின் சோ. சுகிர்தனின் ஏழாலையில் உள்ள வீட்டுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சென்றுள்ளார்.

அவரின் வளாகத்துக்குள் சென்ற பெண் கொண்டு சென்ற பெற்றோலை தனது உடலில் ஊற்றி தீ வைத்துள்ளார். பின்னர் அங்கிருந்த கிணற்றில் குதித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

மேலும், இதைக் கண்டவர்கள் அந்தப் பெண்ணை காப்பாற்றி தெல்லிப் பழை ஆதார மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அந்தப் பெண் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னா கம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ-03)

## சைவ...

உரிமை, எந்த மதத்துடனும் சேர்ந்து கொள்கின்ற உரிமை, கடவுள் இல்லை என்று கூறுவதற்கும்கூட அடிப்படை உரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நாடு பௌத்த நாடு என்ற மமதையில் அரசாங்கத்தின் உதவியுடன் பௌத்த பிக்குகளும் தொல்லியல் திணைக்களமும் இணைந்து முன்னெ டுக்கப்படும் பௌத்த மயமாக்கல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்" - என்றார். (ஐ)

## சர்வ கட்சி...

இதனிடையே, தேர்தலை இலக்கு வைத்து அரசாங்கத்தை பலப்படுத்தும் நோக்கில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை பல்வேறு தந்திரோபாயங்கள் ஊடாக அரசாங்கத்துடன் இணைத்துக் கொள் ளும் செயல்பாடு நடப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட் டியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu

# தேசிய அரசு யோசனையை நிராகரித்தது டலஸ் அணி!



கொழும்பு, ஏப். 18

**தேசிய இணக்கப்பாட்டு அரசொன்றை அமைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அழைப்பை ஏற்காதிருக்க டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை தீர்மானித்துள்ளது.**

டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் உட்பட மொட்டு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்தே சுதந்திர மக்கள் சபையை நிறுவியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம், மத்திய வங்கிச் சட்டம் போன்ற விடயங்களில் கொள்கையளவில் உடன்பட முடியாது என்பதாலேயே, தேசிய அரசு யோசனையை நிராகரிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பரந்தப்பட்ட எதிரணி கூட்டணியொன்றை உருவாக்குவதற்கு இந்த அணி போராடி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# அரிசி, சீனி, பருப்பு போன்றவற்றின் விலைகள் அதிகரிக்கும் சாத்தியம்?

கொழும்பு, ஏப். 18

அரிசி, சீனி மற்றும் பருப்பு போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் சாத்தியங்கள் காணப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொள்கலன் போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிப்பதால் இவ்வாறு பொருட்களின் விலைகள் உயரும் என தெரிவிக்கப்படுகின்றது.

கொள்கலன் போக்குவரத்து குறித்து நிர்ணயிக்கப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளமை காரணமாக இறக்குமதியாளர்கள் இந்தக் கட்டணங்களை ஏற்க நேரிட்டுள்ளதாகவும் இதன் சுமை நுகர்வோரையே சென்றடையும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அன்றாடம் நுகரும் சீனி, அரிசி மற்றும் பருப்பு போன்ற பொருட்களின் விலைகளில் இந்த போக்குவரத்துக் கட்டணங்கள் தாக்கம் செலுத்தும் என தெரிவிக்கப்படுகின்றது.

இறக்குமதியாளர்கள் உள்ளிட்ட உரிய தரப்புக்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தாது வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்தமையினால் பல்வேறு பிரச்னைகள் எழுந்துள்ளதாக சீனி இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் ஜீ.எம். அபேசேகர தெரிவித்தார். (அ)

# ஈஸ்டர் தாக்குதலினால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கோரி 21ஆம் திகதி மனித சங்கிலிப் போர்!

## கர்தினால் மல்கம் ரஞ்சித் அழைப்பு

கொழும்பு, ஏப். 18

உயிர்த்த ஞாயிறுதாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்கான கிறிஸ்தவ திருச்சபையின் முயற்சிகளுக்கு அனைத்து இலங்கையர்களும் தங்கள் பேதங்களை மறந்து ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'நீதி நிலைநாட்டப்படும் வரை நாங்கள் உங்களை அவதானித்துக் கொண்டிருப்போம்' என்ற தொனிப் பொருளில் 21ஆம் திகதி பரப்புரை இயக்கமொன்று ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

மனித சங்கிலிப் போராட்டத்தை ஆரம்பித்துள்ள கிறிஸ்தவ திருச்சபை, 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் 8.45 வரை மனிதசங்கிலிப் போராட்டத்தை முன்னெடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.



நீங்கள் நீர்கொழும்பு-கொழும்பு பிரதான வீதிக்கோ அல்லது தெஹிவளை முதல் மொரட்டுவை வரையிலோ அல்லது களுத்துறை முதல் பேருவளை வரையிலோ மனித சங்கிலி போராட்டத்தில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என தெரிவித்துள்ள கர்தினால் மல்கம் ரஞ்சித், அமைதியாக கோசங்கள் எவற்றையும் எழுப்பாமல் போராட்டத்தில் ஈடுபடுமாறும் கேட்டுக்கொண்டார்.

மக்களை தொந்தரவு செய்யும் விதத்தில் செயற்படக்கூடாது. காலைநேர போக்குவரத்துக்கு குழப்பம் விளைவிக்ககூடாது. நாங்கள் அமைதியான விதத்தில் மௌனப் போராட்டத்திலேயே ஈடுபடுகின்றோம் எனவும் கர்தினால் தெரிவித்தார். (அ)

# அதிக வெப்பம் மரணத்தையும் ஏற்படுத்தலாம்!

## சிரேஷ்ட பேராசிரியர் இந்திக கருணாதிலக

கொழும்பு, ஏப். 18

நாட்டில் தற்போது நிலவும் அதிக வெப்பமான காலநிலை குழந்தைகள் , முதியவர்கள், நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வெயிலில் அதிக நேரத்தை செலவிடுபவர்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய அபாயம் காணப்படுகிறது. அதிக வெப்பத்தை உள்ளீர்த்தலால் ஏற்படக்கூடிய நீர்சத்து குறைபாடானது மரணத்தையும் ஏற்படுத்தக்கூடியது என கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட சிரேஷ்ட பேராசிரியர் இந்திக கருணாதிலக தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

தற்போது நிலவும் மிகவும் வெப்பமான காலநிலை குழந்தைகள் , முதியவர்கள் மற்றும் அதிகளவில் வெயிலில் அன்றாட செயற்பாடுகளில் அல்லது தொழிலில் ஈடுபடக் கூடியவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாகும். எனவே இந்தக் குழுவினர் அநாவசியமாக வெயிலில் செல்வதை நிச்சயம் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

இவர்கள் உள்ளிட்ட ஏனைய அனைவரும் இவ் அதிக வெப்பத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்வதற்காக ஆடைகளை அணியும் போதும் இள நிறத்தில் அணிவது பொருத்தமானதாகும். அத்தோடு அதிகளவில் நீர் அருந்துதல் மிக முக்கியத்துவமுடையதாகும். எனவே நாளொன்றுக்கு சுமார் இரண்டரை லீற்றர் நீர் அருந்துதல் பொருத்தமானது.

நீர் ஆகாரங்கள் அல்லது நீர் தன்மையுடைய உணவுகளை அதிகளவில் உட்கொள்ளவேண்டுமே தவிர , குளிர்பானங்களை அளவுக்கதிகமாக அருந்துவது பொருத்தமற்றது. இதன் காரணமாக ஏனைய பாதிப்புக்கள் ஏற்படக்கூடும். அதிக வெப்பம் காரணமாக மயக்கம் , சோர்வு மற்றும் வாந்தி உள்ளிட்ட நோய் அறிகுறிகள் ஏற்படக்கூடும். திடீரென இவ்வாறான நோய் அறிகுறிகள் தென்படுபவர்கள் உடனடியாக வைத்தியர்களை நாட வேண்டியது அவசியமாகும்.

அதிக வெப்பம் காரணமாக நீர்ச்சத்து குறைபாடு ஏற்படும்போது மரணம் ஏற்படக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன. எனவே குழந்தைகள் , முதியோர் , நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட சகலரும் தமது சுகாதார நிலைமை தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# தினமும் மூன்று லீற்றருக்கும் அதிகமான நீரை பருகுங்கள் !

கொழும்பு, ஏப். 18

தினமும் மூன்று லீற்றருக்கும் அதிகமான நீரினை பருகுங்கள் என யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடுமையான வெப்பமான கால நிலை நிலவி வருவதனால் , உடலில் உள்ள நீர் சத்துக்கள் இழக்கப்படும். அதனால் சூரியன் உச்சம் கொடுக்கும் மதிய நேரங்களில் வெளி பயணங்களை தவிர்த்து கொள்ளுங்கள்.

தினமும் 3 லீற்றர் வரையில் நீர் அருந்துங்கள். அத்துடன், போதியளவு நீராகாரங்கள் அருந்துங்கள். நீர்த்தன்மையுள்ள வெள்ளரிப் பழம் போன்றவற்றை உண்ணுங்கள்-என்றார். (அ)

# பாராளுமன்ற தமிழ் அரங்கத்துக்கு விக்கினேஸ்வரன் எம்.பியும் ஆதரவு

கொழும்பு, ஏப். 18

"பாராளுமன்ற தமிழ் அரங்கம்" என்ற முன்மொழிவுக்கு, தமிழ் மக்கள் கூட்டணிச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீ. விக்கினேஸ்வரன் தனது ஆதரவை மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளார் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியன தமது அதிகார பூர்வ ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 2024ஆம் ஆண்டு இலங்கையில் தேர்தல் வருடமாக அமையும்?

கொழும்பு, ஏப். 18

2024ஆம் ஆண்டு இலங்கையில் தேர்தல் வருடமாக அமையுமென அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

இதற்கமைய, 2024 இல் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல் என்பன இடம்பெறக்கூடும் என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முதலில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலும், அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலும் நடைபெறும் எனவும், அதன் பின்னரே ஏனைய தேர்தல்கள் குறித்து முடிவெடுக்கப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

அதேவேளை, உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் இவ்வருடத்துக்குள் நடைபெறும் எனக் கூறப்பட்டாலும் அதற்கான சாத்தியம் குறைவு எனவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.